தமிழ்நாடு அரசு

# புத்தாக்கப் பயிற்சிக் கட்டகம்

# 2021-2022

11

# பொதுத் தமிழ்

பள்ளிக் கல்வித்துறை

11th_General Tamil_RCM_TM.indd 1 8/14/2021 11:09:12 AM

| வ.எண் | தலைப்பு | பக்க எண் |
|---|---|---|
| 1 | மொழியின் சிறப்புகள் | 1 |
| 2 | எழுத்து, சொல்லிலக்கணங்களைப் பற்றி அறிதல் | 3 |
| 3 | நால்வகைச் சொற்கள் | 6 |
| 4 | திணை, பால், எண், இடம் பற்றி அறிதல் | 9 |
| 5 | பகுபத உறுப்புகள் | 12 |
| 6 | இலக்கணக் குறிப்பு | 15 |
| 7 | புணர்ச்சி விதிகள் | 18 |
| 8 | அலகிட்டு வாய்பாடு கண்டறிதல் | 21 |
| 9 | வல்லினம் மிகும் இடங்கள் | 24 |
| 10 | சொற்களைப் பிரித்தும் சேர்த்தும் எழுதுதல் | 27 |
| 11 | இரு சொற்களைப் பயன்படுத்தி சொற்றொடர் அமைத்தல் | 28 |
| 12 | மயங்கொலிச் சொற்களைத் தொடராக்குதல் | 31 |
| 13 | பிறமொழிச் சொற்களைத் தமிழ்ப்படுத்துதல் | 33 |
| 14 | உவமையைப் பயன்படுத்தி சொற்றொடர் அமைத்தல் | 35 |
| 15 | வேர்ச் சொற்களை எச்சங்களாகவும் வினைமுற்றாகவும் மாற்றுதல் | 37 |
| 16 | பேச்சு வழக்கை எழுத்து வழக்காக மாற்றுதல் | 39 |
| 17 | மரபுப்பிழை நீக்கம் | 42 |
| 18 | இலக்கிய நயம் பாராட்டல் | 44 |
| 19 | பா மற்றும் பா வகை அறிதல் | 46 |
| 20 | திணை | 48 |
| 21 | துறை | 51 |
| 22 | அணிகள் | 54 |
| 23 | முதற்பொருள், கருப்பொருள், உரிப்பொருள்களைப் பற்றி அறிதல் | 57 |
| 24 | பழமொழி வாழ்க்கை நிகழ்வு | 60 |
| 25 | கவிதை இயற்றப் பழகுதல் | 62 |
| 26 | கலைச்சொல்லாக்கம் | 64 |
| 27 | திருக்குறள் | 67 |
| 28 | சங்க இலக்கியம் | 70 |
| 29 | சிற்றிலக்கியங்கள் | 73 |
| 30 | பாரதியார் | 75 |




11th_General Tamil_RCM_TM.indd 3 8/14/2021 11:09:12 AM

# 1 மொழியின் சிறப்புகள்

## கற்றல் விளைவுகள்

- தமிழ் மொழியின் தொன்மை பற்றிய செய்திகளை அறிந்து கொள்ளுதல்.
- மொழியின் சிறப்புகளையும் பெருமைகளையும் சான்றாதாரங்களுடன் புரிந்து கொள்ளுதல்.

## ஆசிரியர் செயல்பாடு

**ஆர்வமூட்டல் :**

மாணவர்களே! நம் கருத்துக்களைப் பகிர்ந்துகொள்ள உதவும் கருவி என்ன? என்ற வினாவினை எழுப்பி 'மொழி ' என்ற பதிலைப் பெற்று மொழியின் தேவையைத் தெளிவுபடுத்துதல்.

## கற்பித்தல் செயல்பாடுகள்

**செயல்பாடு : 1**

உலக மொழிகளுள் தலை சிறந்ததாகவும், செம்மை நிறைந்ததாகவும் விளங்கும் மொழி தமிழ்மொழி. தொல்காப்பியத்துக்குப் பாயிரம் எழுதிய பனம்பாரனார் தமிழ்நாட்டின் எல்லையை,

"வடவேங்கடம் தென்குமரி ஆயிடைத்
தமிழ்கூறு நல்லு லகத்து"

என்று குறிப்பிடுகிறார். இலெமூரியாப் பகுதியில் வாழ்ந்த தமிழர்தம் உலக நாகரிகத்திற்கு வித்திட்டனர் என்பது ஜெர்மானியக் கவிஞர் ஹெக்கல் அவர்களின் கூற்று. சிந்து சமவெளியில் புதையுண்ட மொகஞ்சதாரோ, ஹரப்பா நகரங்களில் தமிழ் முத்திரைகள் காணப்படுகின்றன என ஹீராஸ் பாதிரியார் கூறுகிறார். புறப்பொருள் வெண்பாமாலை பாடிய ஐயனாரிதனார்,

"கல்தோன்றி மண்தோன்றாக் காலத்தே
வாளொடு முன்தோன்றி மூத்த குடி தமிழ்க்குடி"

என்று சிறப்பித்துக் கூறுகிறார்.

தமிழில் இருந்தே பிற மொழிகள் பிறந்தன என்ற கருத்தை உணர்த்தும் விதமாக பேராசிரியர் மனோன்மணீயம் சுந்தரம் பிள்ளை,

"கன்னடமும் களிதெலுங்கும்
கவின் மலையாளமும் துளுவும்
உன்னுதரத் துதித்தெழுந்தே
ஒன்றுபல ஆயிடினும்"

என்று புகழ்ந்து பாடுகிறார். உலக மொழிகளில் பழமையானவை என்று கிரேக்கம், இலத்தீன், வடமொழி, தமிழ் ஆகியவற்றைக் கூறுவது மரபு. பன்மொழிப்புலவர் கா. அப்பாதுரையார் "உலக இலக்கியம்" என்ற நூலில் கிரேக்க இலக்கியத்திற்கும் தமிழ் இலக்கியத்திற்கும் நெருங்கிய தொடர்பு காணப்படுகிறது என்று கூறுகின்றார்.



11th_General Tamil_RCM_TM.indd 1 8/14/2021 11:09:12 AM

**செயல்பாடு : 2**

தமிழ் மொழி இயல் இசை நாடகம் என்னும் மூன்று பிரிவுகளை உடையது. அதில் இயல் தமிழ் என்பது இரு வகை வழக்கிலும் உள்ள செய்யுளும் வசனமும் அடங்கிய நூல்களின் தொகுதி. இயல்பாக எழுதப்படுவதும் பேசப்படுவதுமாகிய தமிழை இயல் என்கிறோம்.

இசை என்பது பண்ணிசைத்துப் பாடப்படுவது. பண்ணோடு கலந்தும் தாளத்தோடு கூடியும் இசைக்கப்படுவது. தமிழிசை ஏழு வகைப்படும். அவை குரல், துத்தம், கைக்கிளை, உழை, இளி, விளரி, தாரம் என்பவையாகும். இந்த ஏழு இசையிலிருந்து பிறப்பவையே பண். இப்பண்களால் ஆகிய பாடல்கள் கீர்த்தனங்கள், வரிப்பாட்டு, சிந்து, ஆனந்தக் களிப்பு, கும்மி, தெம்மாங்கு முதலிய பெயர்களால் அழைக்கப்படுகிறது.

இயற்றமிழும், இசைத்தமிழும் கலக்க நாடகத்தமிழ் பிறக்கும். நாடகம் என்ற சொல்லாட்சி 'நாடக வழக்கினும்' எனத் தொல்காப்பியத்திலும்,

*"நாடக மகளி ராடுகளைத் தெடுத்த*
*வீசிவீங் கின்னியங் கடுப்ப"*

என்று பெரும்பாணாற்றுப் படையிலும்,

*" நாடக நன்னூல் நன்கு கடைப்பிடித்து"*

என்று சிலப்பதிகாரத்திலும் எடுத்துக் கூறப்பட்டுள்ளன. இயல், இசை, நாடகம் ஆகிய மூன்றிலும் தன்னிகரற்ற படைப்புகளும், வாழ்வியல் நெறிகளும் ஒருங்கிணைந்த மொழியாக தமிழ்மொழி விளங்குகின்றது.

**செயல்பாடு : 3**

சங்க இலக்கியங்களைப் பதினெண் மேற்கணக்கு நூல்கள் என்று அழைப்பதோடு எட்டுத்தொகை, பத்துப்பாட்டு என்றும் அழைப்பர். அகம், புறம் என்ற வாழ்வியலை மையப்படுத்திய கருத்துக்களின் தொகுப்பாகும்.

வாழ்வை நெறிப்படுத்தும் அற இலக்கியங்களைக் கொண்டதாக பதினெண் கீழ்க்கணக்கு நூல்கள் அமைகின்றன. மேலும் காப்பியங்கள், சிற்றிலக்கியங்கள், தனிப்பாடல்கள், இடைக்கால புலவர்களின் படைப்புகள், கவிதை, புதினம், சிறுகதை என்ற பன்முக படைப்புகள் சொல்லில் அடங்காதவை.

திருவள்ளுவர், இளங்கோவடிகள், கம்பர், பாரதியார், மறைமலை அடிகள், நாமக்கல் கவிஞர், சுரதா, திரு.வி.க., வீரமாமுனிவர் போன்ற தமிழ்ச் சான்றோர்களின் பெருமையை உலகம் நன்கு அறியும்.

கால மாற்றத்திற்கு ஏற்ப 'நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக' விளங்குகின்ற தமிழ்மொழி 'உயர்தனிச் செம்மொழி 'என்று ஏற்றுக்கொள்ளப்பட்டு அனைவராலும் போற்றப்படுகின்றது.

## மாணவர் செயல்பாடு

- ✍ மாணவர்களிடம் தமிழ் இலக்கியங்கள் சிலவற்றின் பெயர்களைக் கூறி இலக்கியத்தை எழுதியவர் யார் எனக் கேட்டு அறிதல்.
- ✍ மாணவர்களை இரு குழுக்களாகப் பிரித்து நூல் பெயரை ஒரு குழுவும் ஆசிரியர் பெயரை மறு குழுவும் கூறுமாறு செய்தல்.

## மதிப்பீடு

1. முத்தமிழ் தொகைச்சொல்லை விளக்குக.
2. பதினெண் மேற்கணக்கு நூல்கள் யாவை?
3. ஐம்பெருங்காப்பியங்களைக் கூறுக.
4. பாரதியின் படைப்புகளைப் பட்டியலிடுக.


11th_General Tamil_RCM_TM.indd 2 8/14/2021 11:09:12 AM

# 2 எழுத்து, சொல்லிலக்கணங்களைப் பற்றி அறிதல்

## கற்றல் விளைவுகள்

- ஐந்திலக்கணங்களைப் பற்றி அறியச் செய்தல்.
- மொழியில் எழுத்துகளின் ஒலிவடிவம், வரிவடிவம் பற்றி அறிதல்.
- சொல்லாக்க விதிமுறைகளை அறிந்து புதிய சொற்களை உருவாக்குதல்.

## ஆசிரியர் செயல்பாடு

### ஆர்வமூட்டல்

மாணவர்களே! தெருவில் வியாபாரிகள் பூ, பழம், கீரை போன்றவற்றை எவ்வாறு கூவி விற்பார்கள்? என்று ஆசிரியர் வினவ அதற்கான விடைகளை மாணவர்களிடமிருந்து வரவழைத்து ஆர்வமூட்டல்.

## கற்பித்தல் செயல்பாடுகள்

### செயல்பாடு: 1

### இலக்கணம் :

மொழியைத் தெளிவுறப் பேசவும் எழுதவும் உதவுவது இலக்கணம். மொழியின் சிறப்புகளை அறியவும் இலக்கணம் துணை செய்யும். அவ்விலக்கணம் ஐந்து வகைப்படும். அவை: எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி என்பனவாகும்.

| எழுத்து | | | | | |
|---|---|---|---|---|---|
| முதலெழுத்து – 30 | | | | | சார்பெழுத்து – 10 |
| உயிர் – 12 | | மெய் – 18 | | | உயிர்மெய் |
| குறில் – 5 | நெடில் – 7 | வல்லினம் – 6 | மெல்லினம் – 6 | இடையினம் – 6 | ஆய்தம் |
| அ இ உ எ ஒ | ஆ ஈ ஊ ஏ ஐ ஓ ஔ | க் ச் ட் த் ப் ற் | ங் ஞ் ண் ந் ம் ன் | ய் ர் ல் வ் ழ் ள் | உயிரளபெடை |
| | | | | | ஒற்றளபெடை |
| | | | | | குற்றியலுகரம் |
| | | | | | குற்றியலிகரம் |
| | | | | | ஐகாரக்குறுக்கம் |
| | | | | | ஔகாரக்குறுக்கம் |
| | | | | | மகரக்குறுக்கம் |
| | | | | | ஆய்தக்குறுக்கம் |



11th_General Tamil_RCM_TM.indd 3 8/14/2021 11:09:12 AM

**அளபெடை :**

- அளபெடை = அளபு + எடை
- அளபு – அளவு (மாத்திரை)
- எடை – எடுத்தல்
- அளபெடுத்தல் – நீண்டு ஒலித்தல்

| | | |
|---|---|---|
| அளபெடை – 2 | உயிரளபெடை – 3 | செய்யுளிசை அளபெடை |
| | | இன்னிசை அளபெடை |
| | | சொல்லிசை அளபெடை |
| | ஒற்றளபெடை | |

**உயிரளபெடை :**

செய்யுளில் ஓசை குறையும் போது அதனை நிறைவு செய்ய உயிர் நெடில் எழுத்துகள் ஏழும் சொல்லின் முதல், இடை, கடை ஆகிய மூன்று இடங்களிலும் அளபெடுப்பது உயிரளபெடை ஆகும்.

| அளபெடை | செய்யுளிசை/ இசைநிறை | இன்னிசை | சொல்லிசை |
|---|---|---|---|
| செய்யுளின் ஓசை | குறையும் | குறையாது | குறையாது |
| காரணம் | ஓசையை நிறைவு செய்ய நெட்டெழுத்துகள் ஏழும் அளபெடுப்பது. | இனிய ஓசையைத் தருவதற்காக அளபெடுப்பது | ஒரு பெயர்ச்சொல் எச்சச் சொல்லாகத் திரிந்து அளபெடுப்பது. |
| சான்று | ஓஒதல் வேண்டும்– மொழி முதல்<br>உறாஅர்க்கு உறுநோய்– மொழி இடை<br>நல்ல படாஅ பறை– மொழிஇறுதி | கெடுப்பதூஉம் எடுப்பதூஉம் | உரனசைஇ வரனசைஇ |

**செயல்பாடு : 2**

**ஒற்றளபெடை :**

ஒற்றெழுத்துகளைக் (மெய்யெழுத்து, ஆய்தம்) கொண்டு ஓசையை நிறைவு செய்வது ஒற்றளபெடை.

ங், ஞ், ண், ந், ம், ன், வ், ய், ல், ள் ஆகிய பத்து மெய்களும், ஆய்த எழுத்து (ஃ) ஒன்றும் ஆக 11 எழுத்துகள் ஒற்றளபெடையில் அளபெடுக்கும்.

**சான்று :**

- எஃஃகிலங்கிய கையராய் இன்னுயிர்
- கண்ண் கருவிளை



11th_General Tamil_RCM_TM.indd 4 8/14/2021 11:09:12 AM

**செயல்பாடு : 3**

**சொல் என்பதன் வரையறை :**

ஓர் எழுத்து தனித்தோ, பல எழுத்துகள் சேர்ந்தோ பொருள் தரும் வகையில் அமைவது சொல்லாகும். அவை,

- இருதிணை ஐம்பால்களைக் குறிக்கும்.
- மூவகை இடங்களில் வரும்.
- உலக வழக்கு செய்யுள் வழக்கிலும் வரும்.
- வெளிப்படையாகவும் குறிப்பாகவும் வரும்.

**தொழிற்பெயர் :**

ஒரு வினையை அல்லது செயலைக் குறிக்கும் பெயரானது எண், இடம், காலம், பால் ஆகியவற்றை வெளிப்படையாகவோ குறிப்பாகவோ உணர்த்தாமல் வருவது தொழிற்பெயர் எனப்படும்.

**சான்று :**

- கொடுத்தல், நடத்தல், ஈதல்.

**விகுதி பெற்ற தொழிற்பெயர் :**

வினையடியுடன் விகுதி சேர்வதால் உருவாகும் தொழிற்பெயர் விகுதி பெற்ற தொழிற்பெயர் ஆகும்.

| வினையடி | விகுதி | தொழிற்பெயர் |
|---|---|---|
| சமை | தல் | சமைத்தல் |
| வாழ் | கை | வாழ்க்கை |
| ஆள் | அல் | ஆளல் |

**எதிர்மறைத் தொழிற்பெயர் :**

எதிர்மறைப் பொருளில் வருவது எதிர்மறைத் தொழிற்பெயர் ஆகும்.

**சான்று :**

- சொல்லாமை, நடவாமை.

## மாணவர் செயல்பாடு

மாணவர்களை இரு குழுக்களாகப் பிரித்தல். ஒரு குழு ஒரு சொல்லைக் கூற மற்றொரு குழு அவற்றிற்குரிய சரியான அளபெடை, தொழிற்பெயர்களை குறிப்பேட்டில் எழுதச் செய்தல்.

## மதிப்பீடு

1. உயிரளபெடை என்றால் என்ன ?
2. 'உரனசைஇ' – இவற்றிற்குரிய அளபெடை யாது ?

# 3 நால்வகைச் சொற்கள்

## கற்றல் விளைவுகள்

- அகராதிகளைப் பார்த்து அவற்றின் பொருளைப் புரிந்து கொள்ளுதல்.
- புதிய சொற்களைப் புரிந்து கொள்வதில் ஆர்வத்தை ஏற்படுத்துதல்.
- பல இதழ்களுக்காகவும், நோக்கங்களுக்காகவும் எழுதும்போது சரியான சொற்கள், தொடர்கள், சொற்றொடர்கள் ஆகியவற்றைப் பயன்படுத்தி எழுதுதல்.

## ஆசிரியர் செயல்பாடு

**ஆர்வமூட்டல் :**

வா, மலர், பட, தேன், நூல், பூ, சால, படி மட, கால் இதுபோன்ற சொற்களை ஆசிரியர் கரும்பலகையில் எழுதி மாணவர்களிடம் பொருள் தரும் சொற்களைக் கூறச் செய்து ஆர்வமூட்டல்.

## கற்பித்தல் செயல்பாடுகள்

**செயல்பாடு : 1**

இலக்கண வகையால் சொற்கள் நான்கு வகைப்படும். அவை

- பெயர்ச்சொல்
- வினைச்சொல்
- இடைச்சொல்
- உரிச்சொல்

**1. பெயர்ச்சொல் :**

ஐம்புலனுக்கும் மனதிற்கும் புலப்படும் பொருள்களைக் குறிக்கும் சொல் பெயர்ச்சொல் எனப்படும்.

ஒரு பொருளின் பெயரையோ, இடத்தின் பெயரையோ, காலத்தின் பெயரையோ குறிக்கும் சொல் பெயர்ச்சொல் ஆகும்.

இஃது ஆறு வகைப்படும். அவை,

- பொருட்பெயர் – புலி, கல்.
- இடப்பெயர் – வீடு, தமிழகம், நாடு.
- காலப்பெயர் – கிழமை, ஆண்டு, மாதம், பருவம்.
- சினைப்பெயர் – கை, கால், காது, கண், மார்பு, தோள், கூந்தல்.
- பண்புப்பெயர் – வண்ணம், வடிவம், அளவு, ஒப்பு, அறிவு, சாதி, குடி, சிறப்பு.
- தொழிற்பெயர் – புகழ்தல், ஓதல், ஈதல்.



11th_General Tamil_RCM_TM.indd 6 8/14/2021 11:09:12 AM

**செயல்பாடு : 2**

**2. வினைச்சொல் :**

- ஒரு மொழிக்கு இன்றியமையாத உறுப்பாக விளங்குவது வினைச்சொல் (verb) ஆகும் .
- ஒரு பொருளின் புடைபெயர்ச்சியை ( movement) வெளிப்படுத்துவது வினைச்சொல்.
- வினை, தொழில், செயல் என்பவை ஒரு பொருள் குறித்த சொற்கள்.

**அ. வினைமுற்றும், எச்சமும் :**

- வினையின் செயல் முற்றுப்பெறின் வினைமுற்று என்றும், முற்றுப்பெறாவிடின் எச்சம் என்றும் வழங்கப்பெறும்.
- எச்சம் பெயரைக் கொண்டு முடிந்தால் பெயரெச்சம் என்றும், வினையைக் கொண்டு முடிந்தால் வினையெச்சம் என்றும் அழைக்கப்பெறும் .

**எடுத்துக்காட்டு :**

- வந்தான் – வினைமுற்று
- வந்த மாணவன் – பெயரெச்சம்
- வந்து விழுந்தான் – வினையெச்சம்

**ஆ. தெரிநிலை வினையும், குறிப்பு வினையும் :**

- வினைச்சொற்கள் காலத்தை வெளிப்படையாகக் காட்டினால் தெரிநிலை வினை என்றும், வெளிப்படையாகத் தோன்றாமல் குறிப்பாகக் காலம் காட்டினால் குறிப்புவினை என்றும் அழைக்கப்படும்.
- வந்தான் என்னும் வினைச்சொல் இறந்தகாலத்தைத் தெளிவாக உணர்த்துவதால் இவை தெரிநிலை வினைச்சொல் எனப்படும்.

**எடுத்துக்காட்டு :**

- (அவன்) நல்லவன் – குறிப்பு வினைமுற்று
- நல்ல மாணவன் – குறிப்பு பெயரெச்சம்
- நன்று செய்தான் – குறிப்பு வினையெச்சம்

நல்லவன், நல்ல, நன்று என்னும் சொற்கள் வெளிப்படையாகக் காலம் காட்டாமல் குறிப்பாகக் காலத்தை உணர்த்துவதால் இவை குறிப்புவினைகளாகும்.

**செயல்பாடு : 3**

**3. இடைச்சொல் :**

- தனக்கென ஒரு பொருளின்றிப் பெயரொடும் வினையொடும் சார்ந்து அவ்வப்பொருளைத் தருவது இடைச்சொல் ஆகும்.
- பெயரும் வினையும் போல தனித்து நடக்கும் ஆற்றல் இல்லாதது.
- இடைச்சொல்லாக வருவன :
- ஐ, மற்று, உம், ஓ, ஏ, யா, கா, பிற, கூட, ஆன், அன், ஆ, ஆம், ஆவது மட்டும்.

**எடுத்துக்காட்டு :**

- ஐ – திருக்குறளை
- மற்று – மற்றொருவர்
- உம் – தந்தையும் தாயும்



11th_General Tamil_RCM_TM.indd 7 8/14/2021 11:09:13 AM

**செயல்பாடு : 4**

**4. உரிச்சொல் :**

- நால்வகைச் சொற்களுள் செய்யுளுக்கு மட்டுமே உரிமை பெற்று வருவது உரிச்சொல் ஆகும்.
- பெயர், வினைச்சொற்களின் பண்பை உணர்த்தி அவற்றுக்கு உரிமை பெற்று நிற்பதால் உரிச்சொல் என்று கூறுதல்.
- உரிச்சொற்கள் ஒரு குணத்தையும், பல குணத்தையும் உணர்த்திப் பெயர் வினைகளைச் சார்ந்து வரும்.
- இசை, குறிப்பு, பண்பு என்னும் பொருள் உணர்த்துவதற்குத் தாமே உரியன ஆதலின் உரிச்சொல் எனப் பெயர் பெற்றது.

| உரிச்சொற்கள் | |
|---|---|
| ஒரு சொல் பல பொருள் – கடி<br>(காப்பு, கூர்மை, நாற்றம் முதலிய பல குணம் குறித்து வரும் ) | பல சொல் ஒரு பொருள் – சால, உறு, தவ, நனி, கழி<br>(மிகுதி என்னும் ஒரு குணம் குறித்து வரும்) |
| கடி மலர் – மணம் மிக்க மலர் | சாலச்சிறந்தது – மிகச்சிறந்தது |
| கடி நகர் – காவல் மிக்க நகர் | உறுபசி – மிகுதியான பசி |
| கடிநுனி – கூர்மையான நுனி | தவச் சிறிது – மிகச் சிறிது |
| | நனி நன்று – மிக நன்று |
| | கழிபேருவகை – மிதமிஞ்சிய உவகை. |

## மாணவர் செயல்பாடு

மாணவர்களிடம் சில தொடர்களைக் கொடுத்து அவற்றிலுள்ள நால்வகைச் சொற்களை அடையாளங் காணச் செய்தல். குறிப்பேட்டில் வகைப்படுத்தி எழுதச் செய்தல்.

## மதிப்பீடு

1. இடைச்சொல்லுக்கு இரண்டு சான்று தருக.
2. செய்யுளுக்கே உரிய சொல் எது ?
3. பெயர்ச்சொல் எத்தனை வகைப்படும் ? அவை யாவை ?

# 4 திணை, பால், எண், இடம் பற்றி அறிதல்

## கற்றல் விளைவுகள்

- மொழியின் அடிப்படைப் பண்புகளைப் பற்றி அறிதல்.
- திணை, பால், எண்,இடம் ஆகியவற்றின் இலக்கணமறிந்து பயன்படுத்தும் திறன் பெறுதல்.
- உலகில் உள்ள பொருட்களைத் திணை, பால், எண், இடம் ஆகியவற்றின் அடிப்படையில் பிரிக்கலாம் என்பதை உணர்த்துதல்.

## ஆசிரியர் செயல்பாடு

### ஆர்வமூட்டல்

ஆசிரியர் கரும்பலகையில் 'குமணன் பூங்காவிற்கு சென்றான்' என்ற தொடரை எழுதி இதிலமைந்துள்ள திணை, பால், எண், இடம், யாது? என மாணவர்களிடம் பதில்களை வரவழைத்து ஆர்வமூட்டல்.

## கற்பித்தல் செயல்பாடுகள்

### செயல்பாடு: 1

தமிழ்மொழியில், பெயர்ச்சொற்களும் வினைச்சொற்களும் திணை, பால் எண், இடம் என்ற நான்கினையும் உணர்த்துகின்றன.

**சான்று :**

| நண்பன் வந்தான் | பறவைகள் பறந்தன |
|---|---|
| திணை – உயர்திணை | திணை – அஃறிணை |
| பால் – ஆண்பால் | பால் – பலவின் பால் |
| எண் – ஒருமை | எண் – பன்மை |
| இடம் – படர்க்கை | இடம் – படர்க்கை |

### திணை

- திணை – ஒழுக்கம் அல்லது இனம் என்று பொருள்.
- திணையின் வகை – இரண்டு. அவை உயர்திணை, அஃறிணை

### உயர்திணை:

உயர்ந்த ஒழுக்கமுடைய ஆறறிவுடைய மக்களைக் குறிப்பது உயர்திணை எனப்படும். தேவர், மக்கள், நரகர் உயர்திணையில் அடங்குவர். இவர்கள் மற்ற உயிர்களை விட நன்மை தீமைகளைப் பிரித்தறியும் ஆற்றல் பெற்றவர்கள்.



11th_General Tamil_RCM_TM.indd 9 8/14/2021 11:09:13 AM

**அஃறிணை :**

அல் + திணை = அஃறிணை. உயர்வு அல்லாத ஒழுக்கம் உடையவை என்று பொருள். தேவர், நரகர், மக்கள் அல்லாத மற்றைய உயிருள்ளவை, உயிரில்லாத பொருள்கள் அனைத்தும் அஃறிணை எனப்படும்.

**சான்று :**

- காகம், மேஜை, ஆடு, எறும்பு, வானம், நிலம், யானை

*"உயர்திணை என்மனார் மக்கட் சுட்டே*
*அஃறிணை என்மனார் அவரல பிறவே"*

– தொல் (சொல் – 1)

*"மக்கள் தேவர் நரகர் உயர்திணை,*
*மற்று உயிர் உள்ளவும் இல்லவும் அஃறிணை"*

– நன்னூல் (261)

**செயல்பாடு : 2**

**பால் :**

- பால் என்பதற்குப் பகுப்பு அல்லது பிரிவு என்பது பொருள்.
- பால் என்பது திணையின் உட்பிரிவு ஆகும்.
- இஃது ஐந்து வகைப்படும். அவை ஆண்பால், பெண்பால், பலர்பால், ஒன்றன்பால், பலவின்பால் ஆகியனவாகும்.

**உயர்திணைக்குரிய பால் பகுப்புகள் : மூன்று**

- ஆண்பால் – உயர்திணைப் பொருள்களில் ஆண்களைக் குறிப்பது.
  சான்று : வளவன், செழியன்
- பெண்பால் – உயர்திணைப் பொருள்களில் பெண்களைக் குறிப்பது.
  சான்று : யாழினி, அரசி, தலைவி
- பலர்பால் – உயர்திணையில் உள்ள ஆண், பெண்களில் பலரைக் குறிப்பது.
  சான்று : பெண்கள், ஆடவர், மக்கள்

**அஃறிணைக்குரிய பால் பகுப்புகள் : இரண்டு**

- ஒன்றன்பால் – அஃறிணைப் பொருள்களில் ஏதேனும் ஒன்றைக் குறிப்பது.
  சான்று : கல், மரம் யானை, புறா, மலை
- பலவின் பால் – அஃறிணைப் பொருள்களில் பலவற்றைக் குறிப்பது.
  சான்று : அவை, வீடுகள், பசுக்கள், மலைகள், மாடுகள்.

**செயல்பாடு : 3**

**எண் :**

பொருள்களின் எண்ணிக்கையைக் குறிப்பது எண் எனப்படும். எண் இரண்டு வகைப்படும். அவை 1. ஒருமை 2. பன்மை

**(i) ஒருமை :**

ஏதேனும் ஒரு பொருளைக் குறிப்பது ஒருமை எனப்படும்.
ஒருமைக்குரிய பால்கள் – மூன்று.

- ஆண்பால் – வளவன், மருதன், அவன்
- பெண்பால் – வள்ளி, தலைவி, குழலி
- ஒன்றன்பால் – மாடு, கல், மலை



11th_General Tamil_RCM_TM.indd 10 8/14/2021 11:09:13 AM

(ii) பன்மை:

பொருட்களில் பலவற்றைக் குறிப்பது பன்மை எனப்படும்.

பன்மைக்குரிய பால்கள் – இரண்டு.

- பலர்பால் – ஆண்கள், பெண்கள், அவர்கள்.
- பலவின்பால் – மாடுகள், பறவைகள்,அவை

**செயல்பாடு : 4**

**இடம் :**

நாம் உரையாடும் போது பேசுகின்ற நாமும், கேட்கின்றவர்களும், பேசப்படும் பொருளும் என்று மூன்று நிலைகள் உள்ளன. இதையே இடம் என்று குறிப்பிடுவர்.

இஃது மூன்று வகைப்படும். அவை,

- தன்மை
- முன்னிலை
- படர்க்கை

1. தன்மை – பேசுபவர் தன்னைக் குறிப்பது.
2. முன்னிலை – முன்னால் இருப்பவரைக் குறிப்பது.
3. படர்க்கை – தன்மையும் முன்னிலையும் அல்லாத பிறர் அல்லது பிற பொருளைக் குறிப்பது.

## மாணவர் செயல்பாடு

மாணவர்களை ஐந்து குழுக்களாகப் பிரித்து ஒவ்வொரு குழுவினரையும் பாடப்பகுதியில் உள்ள ஒரு தலைப்பை எடுத்துக்கொண்டு அதிலமைந்துள்ள சொற்றொடருக்கு திணை, பால், எண், இடம் ஆகியவற்றைக் காணச் செய்தல்.

## மதிப்பீடு

1. உயர்திணைக்குரிய பால் பகுப்புகள் யாவை?
2. பன்மைக்குரிய பால் பகுப்புகள் யாவை? சான்று தருக.
3. தன்மைப் பன்மை பெயர்களுக்கு எடுத்துக்காட்டு தருக.

# 5 பகுபத உறுப்புகள்

## கற்றல் விளைவுகள்

- பதத்தின் வகைகளை அறியச் செய்தல்.
- பகுபதத்தின் உறுப்புகளைப் பற்றி அறிந்து கொள்ளுதல்.

## ஆசிரியர் செயல்பாடு

**ஆர்வமூட்டல் :**

மாணவர்களே! நம் உடலைப் பல்வேறு உறுப்புகளாகப் பிரிப்பது போல தமிழில் உள்ள சொற்களையும் பொருள் தன்மையிலும் உறுப்புகள் தன்மையிலும் பிரிக்கலாம் என்று கூறி ஆர்வமூட்டுதல்.

## கற்பித்தல் செயல்பாடுகள்

**செயல்பாடு : 1**

**பதம் என்பதன் வரையறை :**

ஓர் எழுத்து தனித்தோ அல்லது ஒன்றிற்கு மேற்பட்ட எழுத்துகள் தொடர்ந்து வந்தோ பொருளைத் தந்தால் அது பதம் எனப்படும்.

"எழுத்து தனித்தும் தொடர்ந்தும் பொருள் தரின் பதமாம்.
அது பகாப்பதம், பகுபதம் என இருபாலாகி இயலும் என்ப"

(நன்னூல்–128)

பிரிக்கக் கூடியதும் பிரித்தால் பொருள் தருவதுமான சொல் பகுபதம் எனப்படும். இது பெயர்ப்பகுபதம். வினைப் பகுபதம் என இரண்டு வகைப்படும்.

பிரித்தால் பொருள் தராத சொற்கள் பகாப்பதம் ஆகும்.

**சான்று :**

- செய்வார்–செய்+வ்+ஆர் – பகுபதம்
- கண், சால, பிற – பகாபதம்

**குறிப்பு:**

பெயர்ப்பகுபதச் சொற்களைக் காட்டிலும் வினைப்பகுபதச் சொற்களே வழக்கில் மிகுதி.

**செயல்பாடு : 2**

பகுபத உறுப்புகள் ஆறு வகைப்படும்.

அவை பகுதி, விகுதி, இடைநிலை, சந்தி, சாரியை, விகாரம்.



11th_General Tamil_RCM_TM.indd 12 8/14/2021 11:09:13 AM

### 1. பகுதி (முதல் நிலை) :

சொல்லின் முதலில் நிற்கும் உறுப்பே பகுதி. இது பகாப்பதம் ஆக அமையும். வினைச்சொல்லில் ஏவலாகவும் பெயர்ச்சொல்லில் அறுவகைப் பெயரில் ஏதேனும் ஒன்றாகவும் அமையும்.

**சான்று :**

- வரைந்தான் – வரை – பகுதி
- பார்த்தான் – பார் – பகுதி
- நடிகன் – நடி – பகுதி

### 2. விகுதி (இறுதி நிலை) :

சொல்லின் இறுதியில் நின்று திணை, பால், எண், இடம் காட்டுவதாகவும் அமையும்.

**சான்று :**

படித்தான் – படி + த் + த் + ஆன் (ஆன் – உயர்திணை ஆண்பால் ஒருமை படர்க்கை ஆகியவற்றைக் காட்டி நிற்கிறது)

- வளர்க – வளர் + க – வியங்கோள் வினைமுற்று விகுதி
- செய்தல் – செய் + தல் தொழிற்பெயர் விகுதி
- படித்த – படி + த் + த் + அ பெயரெச்ச விகுதி
- பார்த்து – பார் + த் + த் + உ வினையெச்ச விகுதி

### 3. இடைநிலை :

- பகுதிக்கும் விகுதிக்கும் இடையில் நின்று காலம் காட்டும் உறுப்பு.
- வினைச்சொற்களிலேயே பெரும்பாலும் இடைநிலை வரும்.

1. நிகழ்கால இடைநிலை – கிறு, கின்று, ஆநின்று
2. எதிர்கால இடைநிலை – ப், வ்
3. இறந்தகால இடைநிலை – த், ட், ற், இன்

**சான்று :**

செய்கிறான் – செய் + கிறு + ஆன்
கிறு – நிகழ்கால இடைநிலை

**செயல்பாடு : 3**

### 4. சந்தி:

- பகுதிக்கும் இடைநிலைக்கும் இடையில் வரும்
- சந்தி என்பதற்கு புணர்ச்சி என்று பெயர்
- சந்தியாக வரும் எழுத்துகள் – த், ப், க்
- உடம்படுமெய்களும் (ய், வ்) சந்தியாக வரும்.

**சான்று :**

அசைத்தான் – அசை + த் + த் + ஆன்
த் – சந்தி
மயங்கிய – மயங்கு + இ(ன்) + ய் + அ
ய் – உடம்படுமெய் சந்தி

### 5. சாரியை :

பகுதி, விகுதி, இடைநிலைகளைச் சார்ந்து வரும். பெரும்பாலும் இடைநிலைக்கும் விகுதிக்கும் இடையில் வரும். சாரியையாக வருவது அன்.


11th_General Tamil_RCM_TM.indd 13 8/14/2021 11:09:13 AM

**சான்று :**

நடந்தனன் – நட + த்(ந்) + த் + அன் + அன்
அன் – சாரியை

**குறிப்பு :**

- அன், அள், அர் விகுதிக்கு 'அன்'னே சாரியை
- ஆன், ஆள், ஆர் விகுதிக்கு 'அன்'சாரியை வராது

### 6. விகாரம் :

பகுதி, விகுதி, இடைநிலை ஆகியவை புணரும்போது அவற்றின் வடிவில் ஏற்படும் மாற்றம் விகாரம் ஆகும். இதற்கு தனி உறுப்பு இல்லை.

**சான்று :**

- நின்றான் – நில் (ன்) + ற் + ஆன் (திரிதல்)
- வணங்கிய – வணங்கு + இ(ன்) + ய் + அ (கெடுதல்)
- கண்டான் – காண் (கண்) + ட் + ஆன் (நெடில் குறிலாகக் குறுகியது)

### எழுத்துப்பேறு:

பகுபத உறுப்புகளுள் அடங்காமல் பகுதிக்கும் விகுதிக்கும் நடுவில் காலத்தை உணர்த்தாமல் வரும் மெய்யெழுத்து எழுத்துப்பேறு ஆகும். பெரும்பாலும் 'த்' மட்டுமே வரும். சாரியை இடத்தில் 'த்' வந்தால் அது எழுத்துப் பேறு.

**சான்று :**

- செய்யாதே – செய் + ய் + ஆ + த் + ஏ
த் – எழுத்துப்பேறு

## மாணவர் செயல்பாடு

ஒரு மாணவன் கரும்பலகையில் ஒரு சொல்லை எழுத மற்ற மாணவர்கள் ஒவ்வொருவராக வந்து பிரித்துக் காட்டி உறுப்புகளைக் கூறச் செய்தல்.

## மதிப்பீடு

1. பதம் என்பதன் வரையறை யாது?
2. பகுபத உறுப்புகள் எத்தனை? அவை யாவை?
3. விகுதி என்றால் என்ன?
4. பாடுகிறாள் பகுபத உறுப்பிலக்கணம் தருக.
5. எழுத்துப்பேறு வரையறு.



11th_General Tamil_RCM_TM.indd 14 8/14/2021 11:09:13 AM

# 6 இலக்கணக் குறிப்பு

## கற்றல் விளைவுகள்

- இலக்கண வகைச் சொற்களை அறியச் செய்தல்.
- வேற்றுமை உருபுகளைத் தெரிந்து கொள்ளுதல்.
- தொகைநிலைத் தொடர்களை அறியச் செய்தல்.

## ஆசிரியர் செயல்பாடு

### ஆர்வமூட்டல்

மாணவர்களே! நாம் ஒருவரின் முகக் குறிப்பினால் அவர் கூற நினைக்கும் கருத்தை அறிவது போல தமிழ்ச் சொற்களில் மறைந்து உள்ள உருபுகளையும் விகுதிகளையும் கண்டறிந்து இலக்கணக் குறிப்பை தெரிந்துகொள்ள ஆர்வமூட்டுதல்.

## கற்பித்தல் செயல்பாடுகள்

### செயல்பாடு: 1

இரு சொற்களுக்கு இடையில் வேற்றுமை உருபுகளோ வினை, பண்பு முதலியவற்றின் உருபுகளே மறைந்து வருமானால் அதனைத் தொகைநிலைத் தொடர் என்பர். அவை ஆறு வகைப்படும் 1. வேற்றுமைத் தொகை, 2. வினைத்தொகை, 3. பண்புத் தொகை 4. உவமைத் தொகை, 5. உம்மைத் தொகை, 6. அன்மொழித் தொகை.

வேற்றுமை மொத்தம் எட்டு வகைப்படும். அவற்றில் முதல் வேற்றுமைக்கும் எட்டாம் வேற்றுமைக்கும் உருபு இல்லை. எனவே முதல் வேற்றுமையை எழுவாய் வேற்றுமை என்றும், எட்டாம் வேற்றுமையை விளி வேற்றுமை என்றும் அழைப்பர். மீதமுள்ள ஆறு வேற்றுமை உருபுகள் தொடரில் மறைந்து வருவதைக் காணலாம்.

**சான்று:**

| | | | |
|---|---|---|---|
| திருவாசகம் படித்தான் | திருவாசகத்தைப் படித்தான் | ஐ | இரண்டாம் வேற்றுமைத் தொகை |
| தலை வணங்கு | தலையால் வணங்கு | ஆல் | மூன்றாம் வேற்றுமைத் தொகை |
| சிதம்பரம் சென்றான் | சிதம்பரத்திற்கு சென்றான் | கு | நான்காம் வேற்றுமைத் தொகை |
| மலை வீழ் அருவி | மழையின் வீழ் அருவி | இன் | ஐந்தாம் வேற்றுமைத் தொகை |
| கம்பர் பாடல் | கம்பரது பாடல் | அது | ஆறாம் வேற்றுமைத் தொகை |
| மலைக் குகை | மலையின் கண் குகை | கண் | ஏழாம் வேற்றுமைத் தொகை |


11th_General Tamil_RCM_TM.indd 15 8/14/2021 11:09:13 AM

**உருபும் பயனும் உடன் தொக்க தொகை:**

ஒரு தொடரில் வேற்றுமை உருபும் அதன் பொருளை விளக்கும் சொல்லும் பயனும் மறைந்து வருவது உருபும் பயனும் உடன் தொக்க தொகை எனப்படும்.

**சான்று :**

பால்குடம் – பாலைக் கொண்ட குடம் – இரண்டாம் வேற்றுமை உருபும் பயனும் உடன் தொக்க தொகை

பொற்சிலை – பொன்னாலாகிய சிலை –மூன்றாம் வேற்றுமை உருபும் பயனும் உடன் தொக்க தொகை

**பண்புத்தொகை :**

ஒரு பொருளின் நிறம், குணம், வடிவம், அளவு ஆகியவற்றைக் குறிப்பது பண்புத்தொகை. மேலும் பண்பு பெயருக்கும் அது தழுவி நிற்கும் பெயர்ச்சொல்லுக்கும் இடையே ஆன, ஆகிய என்னும் பண்பு உருபுகள் மறைந்து வருவது பண்புத்தொகை எனப்படும்.

**சான்று :**

1. வெண்ணிலவு
2. கருங்குவளை

**செயல்பாடு : 2**

**வினைத்தொகை:**

காலம் காட்டும் இடைநிலையும் பெயரெச்ச விகுதியும் மறைந்து வரும் பெயரெச்சத்தை வினைத்தொகை என்பர்.

"காலம் கரந்த பெயரெச்சம் வினைத்தொகை"

(நன்னூல்–364)

**சான்று :**

1. ஆடுகொடி
2. வளர் தமிழ்

இத்தொடர்களில் ஆடு, வளர் என்பவை வினைப்பகுதிகள் இவை முறையே கொடி, தமிழ் என்னும் பெயர்ச்சொற்களோடு சேர்த்து காலம் காட்டாத பெயர் எச்சங்களாக உள்ளன. அதாவது காலம் காட்டும் இடைநிலைகள் தொக்கி உள்ளன. மேலும் இவை முறையே ஆடிய கொடி, ஆடுகின்ற கொடி, ஆடும் கொடி எனவும் வளர்ந்த தமிழ், வளர்கின்ற தமிழ், வளரும் தமிழ் எனவும் முக்காலத்திற்கும் பொருந்தும்படி பொருள் தருகின்றன.

**உவமைத்தொகை:**

ஒரு தொடரில் உவமைக்கும் உவமேயத்திற்கும் இடையில் போல, போன்ற, நிகர, அன்ன முதலிய உருபுகளில் ஏதேனும் ஒன்று மறைந்து வருவது உவமைத்தொகை ஆகும்.

**சான்று :**

மலர்ப்பாதம் – இத்தொடர் மலர் போன்ற பாதம் என்ற பொருள் தருகிறது.

மலர் – உவமை

பாதம் – உவமேயம்

இடையில் போன்ற என்னும் உவம உருபு மறைந்து வந்துள்ளது.

**உம்மைத்தொகை:**

சொற்களுக்கு இடையிலும் இறுதியிலும் உம் என்னும் இடைச்சொல் மறைந்து நின்று பொருள் தருவதை உம்மைத்தொகை என்பர்.



11th_General Tamil_RCM_TM.indd 16 8/14/2021 11:09:13 AM

**சான்று :**

வையகம் வானகம்

இத்தொடர் வையகமும் வானகமும் என விரிந்து பொருள் தருகின்றது.

**செயல்பாடு : 3**

**வியங்கோள் வினைமுற்று :**

இருதிணைகளையும் (உயர்திணை அஃறிணை) ஐந்து பால்களையும் (ஆண்பால், பெண்பால், பலர்பால், ஒன்றன்பால், பலவின்பால்) மூன்று இடங்களையும் (தன்மை, முன்னிலை, படர்க்கை) காட்டும் வினைமுற்று வியங்கோள் வினைமுற்று ஆகும். வாழ்த்துதல், வைதல், விதித்தல்,வேண்டல் ஆகிய பொருள்களில் வரும். இதன் விகுதிகள் க, இய, இயர்.

**சான்று :**

வாழ்க, ஒழிக, வாழியர்.

**உரிச்சொல் தொடர்:**

உரிச்சொற்கள் வெளிப்படையாக ஒரு தொடரில் வருவது உரிச்சொல் தொடர் ஆகும்.

**சான்று :**

மாஞாலம், மாநகரம், உறுபசி, சாலவும் நன்று

இத்தொடரில் மா, உறு, சால போன்ற சொற்கள் உரிச்சொற்கள் ஆகும்.

## மாணவர் செயல்பாடு

ஆசிரியர் கரும்பலகையில் பல்வேறு சொற்களை எழுதி ஒவ்வொரு மாணவராக அழைத்து அச்சொல்லுக்குரிய இலக்கணக் குறிப்பைக் கண்டறியச் சொல்லுதல்.

**குழு செயல்பாடு:**

மாணவர்களைப் பல்வேறு குழுக்களாகப் பிரித்தல் பாடநூலில் உள்ள செய்யுள் பகுதியைத் தேர்ந்தெடுத்துக் கொண்டு அதில் அமைந்துள்ள சொற்களுக்கு இலக்கணக் குறிப்புகளைக் காணச் செய்தல்.

## மதிப்பீடு

1. ஆறாம் வேற்றுமை உருபு எது ?
2. பெருந்தேர் என்பதன் இலக்கணக்குறிப்பு யாது ?
3. மாஞாலம் என்பதன் இலக்கணக்குறிப்பு யாது ?



11th_General Tamil_RCM_TM.indd 17 8/14/2021 11:09:13 AM

# 7 புணர்ச்சி விதிகள்

## கற்றல் விளைவுகள்

- புணர்ச்சியைப் பற்றி அறிதல்.
- புணர்ச்சி விதிகளைத் தெரிந்து கொள்ளுதல்.
- புணர்ச்சி விதிகளைப் பயன்படுத்தும் திறன் பெறுதல்.

## ஆசிரியர் செயல்பாடு

**ஆர்வமூட்டல் :**

ஒரே பொருளைக் குறிக்கும் ஒரு சொல்லை ஒரு சீராகவும் இரண்டு சீர்களாகவும் கூறுவேன். அவற்றுள் எது சரி? எது தவறு? எனக் கூறவும்.

1. நானென்று
2. நான் என்று

இரண்டுமே சரியென்றால் எப்படி? என்று வினவி ஆர்வமூட்டல்.

## கற்பித்தல் செயல்பாடுகள்

**செயல்பாடு : 1**

**புணர்ச்சி– பொருள்:**

நிலைமொழி ஈறும் வருமொழி முதலும் ஒன்று சேருவது புணர்ச்சி எனப்படும்.

**சான்று :**

தமிழகம் = தமிழ் + அகம்

நிலைமொழி வருமொழி

'தமிழ்' என்பது நிலைமொழி, நிலைமொழியின் ஈறு 'ழ்'

'அகம்' என்பது வருமொழி, வருமொழியின் முதல் எழுத்து 'அ'

இரண்டும் புணர்ந்து தமிழ் + அகம் = தமிழகம் என்றானது.

**புணர்ச்சி விதிகள் :**

சொற்புணர்ச்சியின்போது நிலைமொழி இறுதியிலும் வருமொழி முதலிலும் ஏற்படும் மாற்றங்களைச் சுருங்கச் சொல்லும் வரையறைகளைப் புணர்ச்சி விதிகள் என்பர். மொழியைப் பிழையின்றிக் கையாளவும் பாடல் அடிகளைப் பொருள் உணர்வுக்கு ஏற்ற வகையில் படித்து அறியவும், மொழி ஆளுமையைப் புரிந்து கொள்ளவும் இது பயன்படுகின்றன.



11th_General Tamil_RCM_TM.indd 18 8/14/2021 11:09:13 AM

**சான்றாக ஒரு புணர்ச்சி விதி**

*"ஈறுபோதல் இடைஉகரம் இய்யாதல்*
*ஆதிநீடல் அடிஅகரம் ஐ ஆதல்*
*தன்னொற்று இரட்டல் முன்நின்ற மெய்திரிதல்*
*இனம் மிகல் இனையவும் பண்பிற்கு இயல்பே".*

*நன்னூல் (136)*

**செயல்பாடு : 2**

**புணர்ச்சி விதிகளின் விளக்கங்கள் :**

**மெய்யீற்றுப் புணர்ச்சி :**

புணர்ச்சியில் நிலைமொழியின் இறுதி எழுத்து மெய் எழுத்தாக நிற்க, வருமொழியின் முதலில் உயிர் எழுத்தும் மெய் எழுத்தும் சேரும் புணர்ச்சியை மெய்யீற்றுப் புணர்ச்சி என்பர்.

நிலைமொழி ஈற்றில் மெய் எழுத்து நிற்க, வருமொழி முதலில் உயிர் எழுத்து வந்தால் அந்த மெய் மீது உயிர் ஏறும்.

*'உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே'*

*– நன்னூல் (24)*

**சான்று :**

அரசனில்லை = அரசன் + இல்லை

**விதி :**

உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே
அரசன் + இல்லை ( ன் + இ = னி )
அரசனில்லை என்று புணரும்.

**குற்றியலுகரப் புணர்ச்சி:**

நிலைமொழி ஈற்றில் குற்றியலுகரம் நிற்க, வருமொழி முதலில் எந்த உயிரெழுத்து வந்தாலும் நிலைமொழி ஈற்றுக் குற்றியலுகரத்தில் உள்ள உகரம் தான் ஏறிய மெய்யை விட்டு விட்டு ஓடிவிடும். உகரம் ஓடிவிட, நின்ற மெய்யின் மேல் வருமொழி முதலில் வந்த உயிரெழுத்து புணரும்.

*'உயிர்வரின் உக்குறள் மெய்விட்டு ஓடும்'*

*நன்னூல் (164)*

**சான்று:**

இயல்பில்லை = இயல்பு + இல்லை

**விதி :**

இயல்பு + இல்லை
இயல் (ப் + உ) + இல்லை
உயிர்வரின் உக்குறள் மெய்விட்டு ஓடும்
இயல் (ப்) + இல்லை

**விதி :**

உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே
இயல் (ப் + இ)ல்லை
இயல்பில்லை என்றாயிற்று.



11th_General Tamil_RCM_TM.indd 19 8/14/2021 11:09:14 AM

**செயல்பாடு : 3**

**புணர்ச்சி விதிகள் பயன்படுத்துதல் :**

**பூப்பெயர் புணர்ச்சி :**

'பூ' என்னும் சொல் நிலைமொழியாய் நிற்க, வருமொழியின் முதலில் வல்லின மெய் எழுத்துகள் வரும்போது வல்லினமெய் மிகுந்து புணர்வது மட்டுமன்றி, அவற்றிற்கு இனமான மெல்லின மெய் மிகுதலும் உண்டு. எனினும் மெல்லின மெய் மிகுதலே பெருவழக்காக உள்ளது.

'பூப்பெயர் முன் இனமென்மையுந் தோன்றும்'

*நன்னூல் (200)*

**சான்று:**

| | | |
|---|---|---|
| பூ + கொடி | = | பூக்கொடி, பூங்கொடி |
| பூ + சோலை | = | பூச்சோலை, பூஞ்சோலை |
| பூ + தொட்டி | = | பூத்தொட்டி, பூந்தொட்டி |
| பூ + பந்து | = | பூப்பந்து, பூம்பந்து |

என்றவாறு புணரும்.

## மாணவர் செயல்பாடு

மாணவர்களுக்குப் பல்வேறு விதிகளின் கீழ் வரும் சொல்லைக் கொடுத்து அதனைப் புணர்ச்சி விதியின்படி எழுதச் செய்தல். மேலும் அன்றாடம் பயன்படுத்தும் சொல்லையும் எழுதி இது என்ன புணர்ச்சி விதியின்படி புணர்ந்துள்ளது என்பதை குறிப்பேட்டில் எழுதி வரச் சொல்லுதல்.

## மதிப்பீடு

1. புணர்ச்சி – பொருள் வரையறு.
2. புணர்ச்சி விதிகள் என்றால் என்ன ?
3. வாயொலி – புணர்ச்சி விதி காண்க.
4. திருந்துமொழி – புணர்ச்சி விதி காண்க.
5. 'பூங்கொடி' எவ்விதியின்படி புணரும் ?



11th_General Tamil_RCM_TM.indd 20 8/14/2021 11:09:14 AM

# 8 அலகிட்டு வாய்பாடு கண்டறிதல்

## கற்றல் விளைவுகள்

- யாப்பின் உறுப்புகள் பற்றி அறிதல்.
- எழுத்து, அசை பற்றித் தெரிந்து கொள்ளுதல்.
- சீர் பிரித்தலை அறிந்து கொள்ளுதல்.

## ஆசிரியர் செயல்பாடு

**ஆர்வமூட்டல் :**

அலகிடுதல் என்பதற்கு பொருள் என்ன? என்று மாணவர்களிடம் கேள்வி கேட்டு செய்யுளில் அசை சீர் பிரித்துக் காட்டல் என்ற பதிலைக் கூறி தெளிவுபடுத்தவேண்டும். அலகிட்டு வாய்பாடு கண்டறிதல் எவ்வாறு என்பதைக் கூறும் யாப்பு இலக்கணத்தைப் பற்றி பார்ப்போம் என்று மாணவர்களுக்குக் கூறி ஆர்வமூட்டல்.

## கற்பித்தல் செயல்பாடுகள்

**செயல்பாடு : 1**

செய்யுள் எழுதுவதற்குரிய இலக்கணத்தைக் குறிப்பது யாப்பிலக்கணம். இதில் உறுப்பியல், செய்யுளியல் என இருவகைகள் உள்ளன. உறுப்பியலில் செய்யுளின் உறுப்புகள் பற்றிக் கூறப்படுகின்றன.

எழுத்து, அசை, சீர், தளை, அடி, தொடை ஆகியவை செய்யுளின் உறுப்புகள் ஆகும்.

**எழுத்து :**

யாப்பிலக்கண அடிப்படையில் எழுத்துகள் குறில், நெடில், ஒற்று என மூன்று வகைப்படும்.

**அசை :**

எழுத்துகளால் ஆனது அசை எனப்படும். ஓரெழுத்தோ, இரண்டெழுத்தோ நிற்பது அசை ஆகும். இது நேரசை, நிரையசை என இருவகைப்படும். அசைப் பிரிப்பில் ஒற்றெழுத்தைக் கணக்கிடுவதில்லை.

| நேரசை | | நிரையசை | |
|---|---|---|---|
| தனிக்குறில் | க | இரு குறில் | குடி |
| தனிக்குறில் ஒற்று | கல் | இரு குறில் ஒற்று | குடில் |
| தனிநெடில் | கா | குறில் நெடில் | கலா |
| தனி நெடில் ஒற்று | கால் | குறில் நெடில் ஒற்று | கலாம் |

**செயல்பாடு : 2**

**சீர் :**

ஒன்று அல்லது ஒன்றுக்கும் மேற்பட்ட அசைகளின் சேர்க்கை சீர் ஆகும். ஓரசைச்சீர், ஈரசைச்சீர், மூவசைச்சீர், நாலசைச்சீர் எனச் சீர்கள் நான்கு வகைப்படும்.



11th_General Tamil_RCM_TM.indd 21 8/14/2021 11:09:14 AM

| ஓரசைச்சீர் | | ஈரசைச்சீர் | | |
|---|---|---|---|---|
| அசை | வாய்பாடு | அசை | வாய்பாடு | |
| நேர் | நாள் | நேர் நேர் | தேமா | மாச்சீர் |
| நிரை | மலர் | நிரைநேர் | புளிமா | |
| நேர்பு | காசு | நிரைநிரை | கருவிளம் | விளச்சீர் |
| நிரைபு | பிறப்பு | நேர்நிரை | கூவிளம் | |

**மூவசைச்சீர்**

| காய்ச்சீர் | | கனிச்சீர் | |
|---|---|---|---|
| அசை | வாய்பாடு | அசை | வாய்பாடு |
| நேர் நேர் நேர் | தேமாங்காய் | நேர் நேர் நிரை | தேமாங்கனி |
| நிரை நேர் நேர் | புளிமாங்காய் | நிரை நேர் நிரை | புளிமாங்கனி |
| நிரை நிரை நேர் | கருவிளங்காய் | நிரை நிரை நிரை | கருவிளங்கனி |
| நேர் நிரை நேர் | கூவிளங்காய் | நேர் நிரை நிரை | கூவிளங்கனி |

- காய்ச்சீர்களை "வெண்சீர்கள்" என்று கூறுவர்.
- மூவசைச் சீர்களை அடுத்து நேரசையோ அல்லது நிரையசையோ சேர்கின்ற பொழுது நாலசைச்சீர் தோன்றும்.

**செயல்பாடு : 3**

- நாம் எளிய முறையில் திருக்குறளை இங்கு அலகிடலாம்.
- திருக்குறள் வெண்பாவின் வகைகளுள் ஒன்றான குறள்வெண்பா வகையைச் சார்ந்தது.
- முதலாம் அடியில் நான்கு சீர்களும் இரண்டாம் அடியில் மூன்று சீர்களும் ஆக மொத்தம் ஏழு சீர்களே இடம்பெறும்.
- ஈரசைச் சீர்கள் நான்கும் வரும் (மாச்சீர் 2, விளச்சீர் 2). மூவசைச் சீர்களில் காய்ச்சீர்கள் நான்கும் வரும், கனிச்சீர் வராது. மூவசைச் சீர்கள் நேரசையில் தான் முடியும்.

**அலகிடுதல் :**

சீர்களை அவற்றிலுள்ள அசைகளின் அடிப்படையில் பிரிப்பதே அலகிடுதல் எனப்படுகிறது. ஒரு சீரை அசை பிரிக்கும் போது பின்வருவனவற்றைக் கருத்தில் கொள்க.

1. மெய்யெழுத்தின் பக்கத்தில்/கோடிடுக.
2. நெடில் பக்கத்தில்/ கோடிடுக.
3. இருகுறில் அடுத்து/ கோடிடுக.
4. ஒற்று, ஆய்தம் அலகு பெறாது. எனவே அவற்றை நீக்கி, ஓரெழுத்து இருப்பின் நேரசை எனவும், இரண்டு எழுத்துகள் இருப்பின் நிரையசை எனவும் கொள்க.

**செயல்பாடு : 4**

சான்றுக்குச் சில திருக்குறள்களைச் சீர் பிரித்து வாய்பாடு எழுதுவது எப்படி என்பதைப் பின்வருமாறு பார்ப்போம்.

**எடுத்துக்காட்டு : 1**

*முயற்சி திருவினை ஆக்கும் முயற்றின்மை*
*இன்மை புகுத்தி விடும்.*


11th_General Tamil_RCM_TM.indd 22 8/14/2021 11:09:14 AM

| வ. எண் | சீர் | அசை | வாய்பாடு |
|---|---|---|---|
| 1 | முயற்/சி | நிரை நேர் | புளிமா |
| 2 | திரு/வினை | நிரை நிரை | கருவிளம் |
| 3 | ஆக்/கும் | நேர் நேர் | தேமா |
| 4 | முயற்/றின்/மை | நிரை நேர் நேர் | புளிமாங்காய் |
| 5 | இன்/மை | நேர்நேர் | தேமா |
| 6 | புகுத்/தி | நிரைநேர் | புளிமா |
| 7 | விடும் | நிரை | மலர் |

**எடுத்துக்காட்டு : 2**

*பொருளல் லவரைப் பொருளாகச் செய்யும்*
*பொருளல்ல தில்லை பொருள்.*

| வ. எண் | சீர் | அசை | வாய்பாடு |
|---|---|---|---|
| 1 | பொரு/ளல் | நிரை நேர் | புளிமா |
| 2 | லவ/ரைப் | நிரை நேர் | புளிமா |
| 3 | பொரு/ளா/கச் | நிரை நேர்நேர் | புளிமாங்காய் |
| 4 | செய்/யும் | நேர் நேர் | தேமா |
| 5 | பொரு/ளல்/ல | நிரை நேர் நேர் | புளிமாங்காய் |
| 6 | தில்/லை | நேர் நேர் | தேமா |
| 7 | பொருள் | நிரை | மலர் |

## மாணவர் செயல்பாடு

பாடநூலிலுள்ள திருக்குறளுக்கு அலகிட்டு வாய்பாடு கண்டறிந்து மாணவர்களை எழுதிக் காட்டச் சொல்லுதல்.

## மதிப்பீடு

1. யாப்பின் உறுப்புகள் எத்தனை? அவை யாவை ?
2. ஓரசைச்சீருக்குரிய வாய்பாடு யாது ?
3. அசை பிரிக்கும் போது கவனிக்க வேண்டியவை யாவை ?
4. பின்வரும் திருக்குறளை அலகிட்டு வாய்பாடு கூறுக.

*'எண்ணென்ப ஏனை எழுத்தென்ப இவ்விரண்டும்*
*கண்ணென்ப வாழும் உயிர்க்கு.'*



11th_General Tamil_RCM_TM.indd 23 8/14/2021 11:09:14 AM

# 9 வல்லினம் மிகும் இடங்கள்

## கற்றல் விளைவுகள்

- வல்லின எழுத்துகளைத் தெரிந்துகொள்ளுதல்.
- மொழியைப் பிழையின்றி எழுதவும் படிக்கவும் தெரிந்துகொள்ளுதல்.
- இரண்டு தொடர்களுக்கு இடையே உள்ள வேறுபாடுகளை அறிந்து பொருளை உணர்தல்.
- ஒற்றுப் பிழைகளை அறிதல்.

## ஆசிரியர் செயல்பாடு

**ஆர்வமூட்டல் :**

மாணவர்களே! வணக்கம்.

'கபிலா உன் கையில் உள்ள திருக்குறள் புத்தகம் யார் கொடுத்தது?' 'கண்ணன் கொடுத்தான்' இதுபோன்ற வினாக்களைக் கேட்டு விடைகளை வரவழைத்து,

- கண்ணன் கொடுத்தான்
- கண்ணனுக்குக் கொடுத்தான்

இரண்டு தொடர்களுக்கு இடையே உள்ள வேறுபாடுகளை மாணவர்களிடம் கேட்டறிந்து ஆர்வமூட்டல்.

## கற்பித்தல் செயல்பாடுகள்

**செயல்பாடு : 1**

இரண்டு சொற்களைச் சேர்த்து எழுதும்போது இடையில் சில இடங்களில் வல்லின மெய்யெழுத்துகள்(க் ச் த் ப்) மிகுந்து வரும். அவை வல்லினம் மிகும் இடங்கள் ஆகும்.

**சான்று :**

- மரம் + பெட்டி = மரப்பெட்டி
- இந்த+ பழம் = இந்தப்பழம்

சில இடங்களில் வல்லின மெய்யெழுத்துகள் மிகாமல் வரும். அதை வலிமிகா இடங்கள் ஆகும்.

**சான்று :**

- இரண்டு + புத்தகம் = இரண்டு புத்தகம்

மிகுந்து வர வேண்டிய இடங்களில் மிகாமலும் மிகாமல் வர வேண்டிய இடத்தில் மிகுந்தும் வந்தால் பொருள் மாறுபட்டு குழப்பம் ஏற்படும்.

- முகிலன் வேலைக் கொடுத்தான் – வேல் (பொருள்)
- முகிலன் வேலை கொடுத்தான் – வேலை (தொழில்)



11th_General Tamil_RCM_TM.indd 24 8/14/2021 11:09:14 AM

**செயல்பாடு : 2**

வல்லினம் மிகும் இடங்களை எடுத்துக்காட்டுகள் மூலம் விளக்குதல்.

(i) அ, இ என்னும் சுட்டெழுத்தின் பின்னும் அந்த, இந்த என்னும் சுட்டுப்பெயர்களின் பின்னும் 'எ' என்னும் வினாவெழுத்தின் பின்னும் எந்த என்னும் வினாச் சொல்லின் பின்னும் வல்லினம் மிகும்.

**சான்று :**

- அ + சட்டை = அச்சட்டை
- இந்த + காலம் = இந்தக் காலம்
- எ + திசை = எத்திசை
- எந்த + பணம் = எந்தப் பணம்

(ii) ஐ என்னும் இரண்டாம் வேற்றுமை விரியில் வல்லினம் மிகும்.

**சான்று :**

- கதவை + திற = கதவைத் திற
- நூலை + படி = நூலைப் படி

(iii) நான்காம் வேற்றுமை(கு) விரியில் வல்லினம் மிகும்.

**சான்று :**

- ஊருக்கு + செல் = ஊருக்குச் செல்
- தோழனுக்கு + கொடு = தோழனுக்குக் கொடு

(iv) என, ஆக போன்ற சொல்லுருபுகளின் பின் வல்லினம் மிகும்.

**சான்று :**

- என + கேட்டார் = எனக் கேட்டார்
- வருவதாக கூறு = வருவதாகக் கூறு

**செயல்பாடு : 3**

மேலும் சில வல்லினம் மிகும் இடங்களை எடுத்துக்காட்டு மூலம் விளக்குதல்.

(i) எண்ணுப்பெயர்களின் பின் வல்லினம் மிகும்.

**சான்று :**

- எட்டு + தொகை = எட்டுத்தொகை
- பத்து + பாட்டு = பத்துப்பாட்டு

(ii) ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சத்தின் பின் வல்லினம் மிகும்.

**சான்று :**

- கூவா + குயில் = கூவாக்குயில்
- ஓடா + குதிரை = ஓடாக்குதிரை



11th_General Tamil_RCM_TM.indd 25 8/14/2021 11:09:14 AM

(iii) திசைப் பெயர்களின் பின் வல்லினம் மிகும்.

**சான்று :**

- கிழக்கு+ பகுதி = கிழக்குப் பகுதி
- வடக்கு + பக்கம் = வடக்குப் பக்கம்

(iv) இரு பெயரொட்டுப் பண்புத்தொகையில் வல்லினம் மிகும்.

**சான்று :**

- மல்லிகை + பூ = மல்லிகைப் பூ
- சித்திரை + திங்கள் = சித்திரைத் திங்கள்

(v) உவமைத்தொகையில் வல்லினம் மிகும்

**சான்று :**

- தாமரை + பாதம் = தாமரைப் பாதம்
- மலர் + கண் = மலர்க்கண்

## மாணவர் செயல்பாடு

வல்லினம் மிகும் இடங்கள் இடம்பெறும் சொற்களைக் கரும்பலகையில் எழுதச் சொல்லுதல்.

## மதிப்பீடு

1. அடிக்கோடிட்ட சொற்றொடர்களின் பொருள் வேறுபாட்டினை எழுதுக ?

   மோகன் <u>கத்திக்</u> கொண்டு வந்தான்.

   மோகன் <u>கத்தி</u> கொண்டு வந்தான்.

2. வல்லினம் மிகும் தொடருக்கு எடுத்துக்காட்டு கூறுக



11th_General Tamil_RCM_TM.indd 26 8/14/2021 11:09:14 AM

# 10 சொற்களைப் பிரித்தும் சேர்த்தும் எழுதுதல்

## கற்றல் விளைவுகள்

- சொற்களைப் பிரித்தும் சேர்த்தும் எழுத கற்றுக் கொள்ளுதல்.

## ஆசிரியர் செயல்பாடு

**ஆர்வமூட்டல் :**

கால்நடை என்னும் சொல்லை சேர்த்தும் பிரித்தும் எழுதுவதால் இருவேறு பொருள் தரும் சொல்லாக அமைந்திருப்பதைக் காண முடிகிறதா? என வினா எழுப்பி ஆர்வமூட்டல்.

## கற்பித்தல் செயல்பாடுகள்

**செயல்பாடு : 1**

தமிழ்ச்சொற்கள் சிலவற்றைச் சேர்த்தும் பிரித்தும் எழுதும்போது இருவேறு பொருள் தரும் தொடர்களாக உள்ளன . அவ்வகைச் சொற்களைத் தெரிந்து கொள்வதன் மூலம் நம் மொழி வளம் பெருகும்.

**சான்று :**

**கானடை :**

- கான் + அடை என்று பிரித்தால் காட்டைச் சேர்தல் என்னும் பொருள் தருகிறது.
- கான் + நடை என்னும்போது காட்டுக்கு நடத்தல் என்னும் பொருள் கிடைக்கிறது.
- கால் + நடை என்றானால் காலால் நடத்தல் என்று பொருள் தருகிறது.

**செயல்பாடு : 2**

**பிண்ணாக்கு :**

கடலை, எள் போன்றவற்றை அரைத்து எண்ணெய் எடுத்தபின் கிடைக்கும்.
பாம்பு தன் பின் நாக்கை நீட்டியது.

**பலகையொலி :**

பல கைகள் சேர்ந்து தட்டுவதால் பிறக்கும் ஒலி.
பலகை ஒலி – மரப்பலகையின் சத்தம்.

## மாணவர் செயல்பாடு

- அறிவில்லாதவன் பிரித்தும் சேர்த்தும் எழுதுதல்.
- வைகை இரண்டு தொடராக எழுதிப் பழகுதல்.
- நஞ்சிருக்கும் – பிரித்தும் சேர்த்தும் எழுதி பயிற்சி பெற செய்தல்.

## மதிப்பீடு

1. தங்கை– பிரித்தும் சேர்த்தும் எழுதுக.
2. எட்டுவரை , எள்துவரை– விளக்குக.

# 11 இரு சொற்களைப் பயன்படுத்தி சொற்றொடர் அமைத்தல்

## கற்றல் விளைவுகள்

- சொற்களின் பொருளை அறிந்து கொள்ளுதல்.
- சொற்களுக்கு இடையே உள்ள வேறுபாடுகளை அறிதல்.
- சொற்களைத் தொடரில் அமைத்து எழுதும் மொழிப்பயிற்சி திறனைப் பெறுதல்.

## ஆசிரியர் செயல்பாடு

**ஆர்வமூட்டல் :**

'மாணவர்களே! இயற்கைக்கும் செயற்கைக்கும் என்ன பொருள்? வேறுபாடு என்ன?' என்பதை வினவி, இதேபோல் மற்ற சொற்களுக்கு உள்ள பொருள் வேறுபாடுகளை மாணவர்களிடம் கூறி ஆர்வமூட்டல்.

## கற்பித்தல் செயல்பாடுகள்

**செயல்பாடு : 1**

தமிழில் உள்ள சொற்களில் குறில், நெடில் வேறுபாடுகள் உள்ளன. சொல்லின் முதலில் குறிலாக வரும் சொற்களுக்கும் சொல்லின் முதலில் நெடிலாக வரும் சொற்களுக்கும் வெவ்வேறான பொருள் உள்ளன.

**சான்று:**

1. கொள்–கோள்

   கொள்–தெரிந்து கொள்ளுதல்

   கோள்–ஒன்பது கோள்கள்

   தொடர் – தெரிந்து கொள் பூமியும் ஒரு கோள்தான்.

2. சிறு–சீறு

   சிறு–அளவு

   சீறு–கோபம்

   தொடர் – திருவிழாக்களில் சிறு சிறு வியாபாரிகளிடம் ஊரார் சீறி விழுந்தனர்.

3. கொடு–கோடு

   கொடு–இரவல் கொடுத்தல்

   கோடு–நேர்க்கோடு

   தொடர் – அகிலன் எழுதுகோல் கொடுத்ததால் நான் குறிப்பேட்டில் கோடு போட்டேன்.



11th_General Tamil_RCM_TM.indd 28 8/14/2021 11:09:14 AM

4. விதி–வீதி

விதி–முன்னரே தீர்மானிக்கப்பட்டது

வீதி–தெரு

தொடர் – சிலம்பில் கண்ணகி தன் விதிப்படி மதுரை வீதியில் நின்றாள்.

**செயல்பாடு : 2**

1. சிலை–சீலை

சிலை–இறைவன் திருவுருவம்

சீலை–துணி

தொடர் – இறைவன் சிலையைத் திரைச்சீலையால் மறைத்திருந்தனர்.

2. தொடு–தோடு

தொடு–தொடுதல்

தோடு–அணிகலன்

தொடர் – தோடு அணிந்த சிறுமியர் தொட்டு விளையாடுகின்றனர்

3. மடு–மாடு

மடு–நீர்நிலை

மாடு–விலங்கு

தொடர் – மாடு மடுவில் தண்ணீர் குடித்தது.

4. மலை–மாலை

மலை–சிகரம்

மாலை–சிறுபொழுது

தொடர் – மலையில் மேய்ந்த மாடுகள் மாலையில் வீடு திரும்பின.

**செயல்பாடு : 3**

5. வளி–வாளி

வளி–காற்று

வாளி–பாத்திரம்

தொடர் – வளியை வாளியால் நிரப்பி அடைக்க முடியாது.

6. விடு–வீடு

விடு–விட்டொழித்தல்

வீடு–மனை

தொடர் – கவலைகளை விட்டு வாழ்வதுதான் வீடு.

7. நடு–நாடு



11th_General Tamil_RCM_TM.indd 29 8/14/2021 11:09:14 AM

நடு–இடைப்பட்டது

நாடு–தேசம்

தொடர் – நடுவண் அரசு நாட்டு மக்களுக்குக் கொரோனா குறித்த விழிப்புணர்வை ஊடகத்தில் வழங்கிவருகிறது.

## மாணவர் செயல்பாடு

மாணவர்களை அழைத்து கரும்பலகையில் இரு சொற்களை எழுதச்சொல்லி அதற்குரிய பொருளையும் தொடரில் அமைத்து எழுதச் சொல்லுதல்.

## மதிப்பீடு

1. குறில், நெடில் எழுத்துகளை வகைப்படுத்துக.
2. படு – பாடு என்ற சொற்களை ஒரே தொடரில் அமைத்து எழுதுக.
3. கலை – காலை என்ற சொற்களை ஒரே தொடரில் அமைத்து எழுதுக.
4. வளி – வாளி என்ற சொற்களை ஒரே தொடரில் அமைத்து எழுதுக.



11th_General Tamil_RCM_TM.indd 30
8/14/2021 11:09:15 AM

# 12 மயங்கொலிச் சொற்களைத் தொடராக்குதல்

## கற்றல் விளைவுகள்

- மயங்கொலிச் சொற்கள் என்ன என்பதை அறிதல்.
- மயங்கொலிச் சொற்கள் மூலம் எவ்வாறு பிழை ஏற்படுகிறது என்பதைத் தெரிந்து கொள்ளுதல்.
- மயங்கொலிச் சொற்களைச் சரியாக புரிந்து கொள்ளுதல்.

## ஆசிரியர் செயல்பாடு

**ஆர்வமூட்டல் :**

மாணவர்களிடம் 'அவனை அளைத்து வா' என்று கூறி இதில் எது? மயங்கொலிச் சொல் என்று கேட்டு அதற்கு சரியான மயங்கொலிச் சொல்லை எடுத்துக் கூறி "அவனை அழைத்து வா" என்பதே சரி என்பதையும் அளை என்றால் புற்று எனப் பொருள்படும் என்பதையும் கூறி இவ்வாறு ஒரே ஒலிப்புமுறைக் கொண்ட சொல்லை மயங்கொலிச் சொற்கள் என்பதை மாணவர்களிடம் கூறி ஆர்வமூட்டல்.

## கற்பித்தல் செயல்பாடுகள்

**செயல்பாடு : 1**

மயங்கொலிச் சொற்கள் என்பது உச்சரிக்கும்போது ஒரே மாதிரியான உச்சரிப்பு முறை கொண்டிருக்கும். கேட்பவர்களுக்கு பொருள் புரியாத வண்ணம் மயக்கத்தை (குழப்பத்தை) ஏற்படுத்தும் சொற்கள் மயங்கொலிச் சொற்கள் ஆகும்.

மயங்கொலி என்பது எழுத்துகளைச் சரியாக உச்சரிக்காததும் தவறாகப் புரிந்து கொள்வதும் தான் மயங்கொலி எனப்படும். மயக்கத்தைத் தரக்கூடிய ஒலி என்பதாகும்.

- காளை
- காலை

மேற்கண்ட சொற்களைப் பாருங்கள் ஒரே மாதிரியான உச்சரிப்பு முறையைக் கொண்டுள்ளது. இதில் நுண்ணிய வேறுபாடே உள்ளது. இதை நாம் சரியாக புரிந்து கொண்டு உச்சரிக்கவில்லை என்றால் பொருளில் குழப்பம் ஏற்படும். இதுவே மயங்கொலிச் சொல் ஆகும்.

**செயல்பாடு : 2**

நம்முடைய தாய் மொழியாகிய தமிழில் ண, ந, ன, ல, ள, ழ, ர, ற ஆகிய எட்டு எழுத்துகள் ஒரே மாதிரியான உச்சரிப்பு முறையை உடையவை. அவைகளை நாம் சரியாக உச்சரிக்கும் முறையைத் தெரிந்து கொண்டால் பிழை ஏற்படுவதைத் தவிர்க்கலாம் .

**தமிழ்மொழியில் மயங்கொலிச் சொற்கள் மூன்று வகையில் அமையும். அவற்றை**

- ந, ன, ண வேறுபாடு
- ர, ற வேறுபாடு
- ல, ழ, ள வேறுபாடு என்று வகைப்படுத்துவர்.


11th_General Tamil_RCM_TM.indd 31 8/14/2021 11:09:15 AM

**செயல்பாடு : 3**

ணகர, னகர வேறுபாடு அறிதல்

- அரண் – மதில் பாதுகாப்பு கோட்டை
- அரன் – சிவன்
- அண்ணம் – மேல்வாய்
- அன்னம் – ஒரு பறவை
- கணை – அம்பு
- கனை – கனைத்தல்
- கணம் – தொகுதி
- கனம் – பளு, சுமை
- காண் – பார்
- கான் – காடு

**பொருள் வேறுபாட்டை உணர்த்த வாக்கியங்களாக அமைத்தல்.**

தண் – குளிர்ச்சி – இரவு நேரங்களில் காற்று தண் என்று வீசும்
தன் – மனிதன் தன்னுடைய உயிரைக் காத்துக் கொள்ள வேண்டும்
பணி – வேலை – மனிதன் தன்னுடைய பணியில் சிறப்பாக செயல்பட வேண்டும்.
பனி – பனிக்கட்டி – இரவுப் பொழுதில் பனி பெய்வதால் வெளியில் செல்லக்கூடாது.

**ர ற – வேறுபாடு**

- மரம் – தாவர வகை
- மறம் – வீரம்
- கரி – யானை
- கறி – காய்கறி
- பரி – குதிரை
- பறி – பிடுங்கு
- கரை – ஓரம்
- கறை – அழுக்கு
- எரி – தீ
- எறி – வீசு

**ல –ழ– ள வேறுபாடு**

- அலி – பேடி.
- அழி – கெடு
- அளி – கொடு
- வாலை – இளம்பெண்
- வாழை – மர வகை
- வாளை – மீன்
- தால் – நாக்கு
- தாழ் – பணிதல், வணங்கு
- தாள் – பாதம்

## மாணவர் செயல்பாடு

கரும்பலகையில் மயங்கொலிச் சொற்களை எழுதி ஒரு மாணவனை அச்சொற்களுக்குச் சரியான பொருளைக் கூறச் செய்து சொற்றொடராக மாற்றுமாறு கூறுதல் வேண்டும்.

## மதிப்பீடு

1. மயங்கொலி என்றால் என்ன?
2. மயங்கொலிச் சொற்கள் எவை?
3. மயங்கொலிச் சொற்களால் எவ்வாறு குழப்பம் அடைகின்றோம்?
4. இரத்தல் – இறத்தல் பொருள் வேறுபாடறிக.

13

# பிறமொழிச் சொற்களைத் தமிழ்ப்படுத்துதல்

## கற்றல் விளைவுகள்

- பிற மொழிக் கலப்பு இல்லாமல் தமிழ் மொழியில் பேசும் முறைகளை அறிந்து கொள்ளுதல்.
- தமிழில் பிறமொழிக் கலப்பு ஏற்படுவதற்கான காரணத்தை அறிதல்.
- பேச்சு வழக்கில் பிறமொழிச் சொற்கள் கலந்து பேசுவதால் தமிழ்ச்சொற்களின் வழக்கு குறைவுபடுவதை விளக்குதல்.

## ஆசிரியர் செயல்பாடு

**ஆர்வமூட்டல் :**

மாணவர்களே!! 1. நீங்கள் அதிகாலையில் எழுந்து என்ன அருந்துவீர்கள்? 2. நீங்கள் எப்படி பள்ளிக்கூடத்திற்கு வருகிறீர்கள்? என்று ஆசிரியர் மாணவர்களிடத்தில் வினவ, அதற்கு மாணவர்கள் 1. Coffee, Tea 2. Bus, Bicycle என்று பல்வேறு விதமான பதில்களை அளிக்கிறார்கள். நீங்கள் கூறிய பதில்கள் அனைத்தும் தமிழ்ச் சொற்கள் அல்ல. பிறமொழிச் சொற்கள் என்று ஆசிரியர் கூறி ஆர்வமூட்டல்.

## கற்பித்தல் செயல்பாடுகள்

**செயல்பாடு : 1**

நம் அன்றாட வாழ்வில் பேசும்போதும் எழுதும்போதும் அதிகப்படியான பிறமொழிச் சொற்களைக் கலந்து பேசவும் எழுதவும் செய்கின்றோம் அவ்வாறு பேசவும் எழுதவும் செய்வதினால் தமிழ் மொழியின் பயன்பாடு குறைவுபடுவதைக் கண்கூடாக காண நேரிடுகிறது. இதனைக் களைந்து நல்ல தமிழில் பேசவும் எழுதவும் நமக்கு அகராதிகள் துணைபுரிகின்றன.

அகராதிகளின் துணைக்கொண்டு பிறமொழிச் சொற்களுக்குரிய தமிழ்ச் சொற்களை முறையாக அறிந்து பேசவும் எழுதவும் செய்வோமாயின் தமிழ்மொழி செல்வாக்கு மிகுந்து காணப்படும்.

**செயல்பாடு : 2**

நம் அன்றாட வாழ்வில் வகுப்பறையிலும், வீட்டிலும் பயன்படுத்தும் பிறமொழிச் சொற்களுக்கு நிகரான தமிழ்ச் சொற்களைப் பற்றி அறிதல்.

| சொற்பட்டியல் | பிறமொழிச் சொற்கள் | நிகரான தமிழ்ச் சொற்கள் |
|---|---|---|
| சாக்பீஸ்,<br>ஆப்செண்ட்,<br>அட்டண்டெண்ட்ஸ் | சாக்பீஸ்,<br>ஆப்செண்ட்,<br>அட்டண்டெண்ட்ஸ் | சுண்ணக்கட்டி<br>வருகைத் தாராமை<br>வருகைப் பதிவேடு |
| செண்ட்டர்,<br>ஜில்,<br>ஐஸ்கிரீம்,<br>டேஸ்ட்,<br>எக்ஸ்பிரஷன் | செண்ட்டர்,<br>ஜில்,<br>ஐஸ்கிரீம்,<br>டேஸ்ட்,<br>எக்ஸ்பிரஷன் | நடுவில்<br>குளிர்ச்சி<br>பனிக்கூழ்<br>சுவை<br>வெளிப்பாடு |

**செயல்பாடு : 3**

இரு நண்பர்கள் தங்களுக்குள் உரையாடும் பொழுது பயன்படுத்தும் பிறமொழிச் சொற்களையும், அவற்றிற்கான தமிழ்ச் சொற்களையும் பற்றி அறிதல்.

முகிலன்: ஹலோ! நண்பா!

வேலன்: ஹலோ நண்பா! பார்த்துப் பல வருஷங்கள் ஆயிடுச்சு இல்லையா ?

முகிலன்: ஆமாம்! எட்டு வருடங்கள் ஆச்சு. இல்லையா?

வேலன்: ஆமாம். நான் இப்ப மல்ட்டி நேஷனல் கம்பெனி ஒன்றில் பிராஜக்ட் மேனேஜரா இருக்கேன். நீ?

முகிலன்: நான் அரசூர் கவர்மெண்ட் காலேஜில பேராசிரியராக இருக்கேன்.

வேலன்: அந்த காலேஜ்ல தான் என் தம்பி முதலாமாண்டு படிக்கிறான்.

முகிலன்: அப்படியா? மகிழ்ச்சி. வீட்டுக்கு வாங்க நண்பா! இப்போ ஒரு மீட்டிங் போயிட்டிருக்கேன். சென்று வருகிறேன் .......

வேலன்: சென்று வருகிறேன்

| பிறமொழிச் சொற்கள் | தமிழ்ச் சொற்கள் |
|---|---|
| வருஷம் | ஆண்டு |
| மல்ட்டி நேஷனல் கம்பெனி | பன்னாட்டு நிறுவனம் |
| பிராஜக்ட் மேனேஜர் | திட்ட மேலாளர் |
| கவர்ன்மெண்ட் காலேஜ் | அரசுக் கல்லூரி |
| மீட்டிங் | கூட்டம் |

**செயல்பாடு : 4**

பிறமொழிச் சொற்கள் அடங்கிய சில சொற்றொடர்களுக்குத் தமிழ்ச் சொற்றொடர்களைக் காணுதல்.

1. கொடுக்கப்பட்ட பெட்டிஷன் மனு வாபஸ் பெறப்பட்டது
   கொடுக்கப்பட்ட புகார் மனு திரும்பவும் பெறப்பட்டது.
2. ப்ரெசிடெண்ட்டும் செகரெட்டரியும் ஒன்றாக வருவர்.
   தலைவரும் செயலரும் ஒன்றாக வருவர்.

## மாணவர் செயல்பாடு

ஒரு மாணவன் கரும்பலகையில் சில பிறமொழிச்சொற்களை எழுத மற்ற மாணவர்கள் ஒவ்வொருவராக வந்து அவற்றிற்குரிய தமிழ்ச்சொற்களை எழுதச் செய்தல்.

## மதிப்பீடு

1. பென்சில், பேனா, பிளாக்போர்டு போன்ற சொற்களுக்குரிய தமிழ்ச் சொற்கள் யாவை?
2. கீழ்க்கண்ட பிறமொழிச் சொற்றொடருக்கு உரிய தமிழ்ச் சொற்றொடரை எழுதுக. மேனேஜர் பைல் எடுத்துவரச் சொன்னார்.

# 14 உவமையைப் பயன்படுத்தி சொற்றொடர் அமைத்தல்

## கற்றல் விளைவுகள்

- உவமையைப் பற்றி அறிந்து கொள்ளுதல்.
- உவமை எவற்றின் அடிப்படையில் தோன்றும் என்பதைப் புரிந்துகொள்ளச் செய்தல்.
- உவமைகளையும் பழமொழிகளையும் பயன்படுத்தி ஒரு தொடரை உருவாக்கும் முறையைத் தெரிந்து கொள்ளுதல்.

## ஆசிரியர் செயல்பாடு

**ஆர்வமூட்டல் :**

மாணவர்களே! உவமை என்றால் என்ன என்பதை வினவி அதன் வழியாக உவமையின் சிறப்புகள், உவமை தோன்றும் விதம், பழமொழிகளின் வழியாக உவமைகளைப் பயன்படுத்தி சொற்றொடர் அமைக்கும் முறையைக் கூறி ஆர்வமூட்டுதல்.

## கற்பித்தல் செயல்பாடுகள்

**செயல்பாடு : 1**

**உவமை என்பதன் விளக்கம்:**

ஒரு செய்தியைக் கூறும் பொழுது எளிதாக புரிந்து கொள்ளும் வகையிலும் கேட்பவர் மனதை ஈர்க்கும் வகையிலும் பயன்படுத்தப்படும் சொல்லே உவமையாகும்.

**உவமை :**

வினை, பயன், வடிவம், உரு என்ற நான்கின் அடிப்படையில் தோன்றும் என்கிறார் தொல்காப்பியர்.

*"வினை பயன் மெய் உரு என்ற நான்கே*
*வகை பெற வந்த உவமத்தோற்றம்"*

*தொல்காப்பியம் (1222)*

ஒன்றை விளக்கவும் தெளிவுபடுத்தவும் அழகுபடுத்தவும் உவமையே எளிமையானதும் தொன்மையானதும் ஆகும்.

உவமைகளைப் பயன்படுத்தி சொற்றொடர் அமைக்கும் பொழுது பெரும்பாலும் உவம உருபான போல என்ற சொல் வெளிப்படையாய் அமையும்.

**சான்று :**

நகமும் சதையும் போல

"அவர் இருவரும் நெருங்கி பழகி வந்தனர்" என்பதை "அவர் இருவரும் நகமும் சதையும் போல பழகி வந்தனர்" என்று கூறும்பொழுது தெளிவும் நலமும் கொண்டு பொருள் விளங்குகின்றது என்பதை அறியலாம்.

**சில உவமைத் தொடர்களுக்கான பொருளைக் காணலாம்.**

| | |
|---|---|
| அடியற்ற மரம் போல | விழுதல் |
| அனலில் விழுந்த புழுப்போல | துன்பம் |
| ஆழம் தெரியாமல் காலை விட்டது போல | திட்டமிடாமை |
| இஞ்சி தின்ற குரங்கு போல | விழித்தல் |
| இருதலைக் கொள்ளி எறும்பு போல | தவிப்பு |
| இலவு காத்த கிளி போல | ஏமாற்றம் |
| உள்ளங்கை நெல்லிக்கனி போல | தெள்ளத் தெளிவு |
| எலியும் பூனையும் போல | பகை |
| சீறிய நாகம் போல | கோபம் |
| உடுக்கை இழந்தவன் கைபோல | துன்பம் |

**செயல்பாடு : 2**

**உவமைத் தொடர்களை வாக்கியத்தில் அமைத்தல் :**

1. அடியற்ற மரம் போல – பாண்டிய நெடுஞ்செழியன் உயிர்நீத்த உடனே கோப்பெருந்தேவி "அடியற்ற மரம் போல" மண் மிசைசாய்ந்து உயிர் நீத்தாள்.
2. இலவு காத்த கிளி போல – பெரு வெள்ளத்தால் வயல் முழுவதும் மணல் மேடாகி பயிர்களை மூடி விட்டபடியால் நாளெல்லாம் பாடுபட்ட உழவன் "இலவு காத்த கிளி போல ஏமாற்றம் அடைந்தான்.
3. உள்ளங்கை நெல்லிக்கனி போல – ஆசிரியர் கூறிய செய்தி "உள்ளங்கை நெல்லிக்கனி போல" தெளிவாக விளங்கியது.
4. அனலில் விழுந்த புழுப்போல – கோவலன் கொலையுண்ட செய்தியைக் கேட்ட கண்ணகி "அனலில் விழுந்த புழுப்போல" துடித்தாள்.

## மாணவர் செயல்பாடு

மாணவர்களிடம் சில உவமைத் தொடர்களைக் கூறி அவற்றின் பொருளைக் கேட்டறிந்து வாக்கியத்தில் அமைக்கும் முறையைக் கரும்பலகையில் எழுதச் செய்தல்.

## மதிப்பீடு

**பின்வரும் உவமைத் தொடர்களுக்கு உரிய பொருளையும் அவற்றை வாக்கியத்தில் அமைத்தும் எழுதுக.**

1. சிதறிய முத்து போல
2. கிணற்றுத் தவளை போல
3. உள்ளங்கை நெல்லிக்கனி போல
4. எலியும் பூனையும் போல
5. அச்சாணி இல்லாத தேர் போல



11th_General Tamil_RCM_TM.indd 36 8/14/2021 11:09:15 AM

# 15 வேர்ச்சொற்களை எச்சங்களாகவும் வினைமுற்றாகவும் மாற்றுதல்

## கற்றல் விளைவுகள்

- வேர்ச்சொல்லை அறிதல்.
- எச்சங்களைப் பற்றி தெரிந்து கொள்ளுதல்.
- வினைமுற்றுகளைப் பற்றி புரிந்து கொள்ளுதல்.
- வேர்ச்சொற்கள் மாற்றமடைவதை அறிதல்.

## ஆசிரியர் செயல்பாடு

**ஆர்வமூட்டல் :**

மாணவர்களிடம் தம்பி நீ படித்து வந்தாயா? என்று கேட்டு இதில் படித்து என்ற சொல் எதிலிருந்து பிறக்கிறது என்று கேட்டு படி என்ற சொல்லிலிருந்து பிறக்கிறது என்று கூறி, இந்த படி என்ற சொல்தான் வேர்ச்சொல் என்று கூறி இவ்வாறு வேர்ச்சொல்லில் இருந்துதான் சொற்கள் பிறக்கின்றன என்று கூறி மாணவர்களை ஆர்வமூட்டல்.

## கற்பித்தல் செயல்பாடுகள்

**செயல்பாடு : 1**

பிரிக்கமுடியாத அடிப்படைச் சொல்லே வேர்ச்சொல் ஆகும். அதனைப் பகுதி என்றும் கூறலாம். வேர்ச்சொல் என்பது பொதுவாகக் கட்டளையாகவோ, ஏவலாகவோ இருக்கும். பகுதி விகுதிகளில் பகுதியாக அமைவதே வேர்ச்சொல் ஆகும்.

**சான்று :**

நட என்ற வேர்ச் சொல்லை மேலும் பிரித்தால் ந, ட என்ற எழுத்துகள் தான் வரும். ஆகையால் பிரிக்கமுடியாத சொல் வேர்ச் சொல்லாகும்.

வேர்ச் சொற்களுடன் ஒட்டுக்கள் சேரும்போது பல்வேறு சொற்கள் உருவாகின்றன.

இப்படி உருவாகும் சொற்கள் எச்சங்களாகவும், முற்றுகளாகவும் உருவாகின்றன. அவை எப்படி மாற்றமடையும் என்பதையும் இங்கே காணலாம்.

**செயல்பாடு : 2**

**எச்சங்கள் :**

எஞ்சி நிற்கும் சொற்கள் எச்சங்கள் ஆகும். அவை பெயரெச்சம், வினையெச்சம் என இருவகைப்படும்.

**பெயரெச்சம் :**

பெயரைக் கொண்டு முடியும் சொல் பெயரெச்சம் எனப்படும்.

"வந்த கண்ணன்"

இதில் வந்த என்ற எச்சச்சொல் கண்ணன் என்ற பெயரைக் கொண்டு முடிவதால் இது பெயரெச்சம் எனப்படும்.

**வினையெச்சம் :**



11th_General Tamil_RCM_TM.indd 37 8/14/2021 11:09:15 AM

வினையைக் கொண்டு முடியும் சொல் வினையெச்சம் எனப்படும்.

"சென்று பார்த்தான்"

இதில் சென்று என்ற எச்சச் சொல் பார்த்தான் என்ற வினையைக் கொண்டு முடிவதால் இது வினையெச்சம் எனப்படும்.

வேர்ச்சொல் பெயரெச்சம் வினையெச்சமாக மாற்றமடைதல்,

- ✍ படி – படித்த சிறுவன்
- ✍ படி – படிக்கின்ற சிறுவன்
- ✍ படி – படிக்கும் சிறுவன்

இப்படி பெயரெச்சம் செய்த, செய்கின்ற, செய்யும் என்ற மூன்றும், மூன்று வடிவங்களில் அமையும்.

**வேர்ச்சொல் பெயரெச்சமாக மாறுதல் :**

- ✍ படி – படித்த பாடம்
- ✍ காண் – கண்ட காட்சி

இவ்வாறு வேர்ச்சொற்கள் பெயரெச்சமாக மாறுகின்றது.

**வேர்ச்சொல் வினையெச்சமாக மாறுதல் :**

- ✍ செல் – சென்று வந்தான்
- ✍ படி – படித்து முடித்தான்

இவ்வாறு வினையெச்சச் சொற்கள் உருவாகிறது.

**செயல்பாடு : 3**

**வினைமுற்று :**

ஒரு செயல் முடிவதை சுட்டுவது வினைமுற்று ஆகும்.

- ✍ நடி – நடித்தான்
- ✍ செல் – சென்றான்

இப்படி வேர்ச்சொல் வினையைக் கொண்டு முடிந்தால் வினைமுற்று ஆகும்.

**வியங்கோள் வினைமுற்று :**

க, இய, இயர் இவற்றைக்கொண்டு முடியும் சொல் வியங்கோள் வினைமுற்று ஆகும். இது வாழ்த்தல், வைதல், வேண்டல், விதித்தல் ஆகிய நிலைகளில் வரும் .

- ✍ வாழ் – வாழ்க, வாழிய, வாழியர்
- ✍ விதித்தல் – உண்க, அமர்க, உண், அமர்
- ✍ வேண்டல் – அருள்க, தருக, அருள், தா

இவ்வாறு வேர்ச்சொற்கள் வினைமுற்றுச் சொற்களாக மாற்றமடைகின்றன.

## மாணவர் செயல்பாடு

- மாணவர்களிடம் தம் பாடப் பகுதியில் இருக்கும் வேர்ச்சொற்களை எச்சங்களாகவும், முற்றுகளாகவும் மாற்றி வருமாறு கூறுதல்.
- கரும்பலகையில் வேர்ச்சொல்லை எழுதி ஒவ்வொரு மாணவராக அழைத்து எச்சச்சொல்லாகவும், முற்றுச்சொல்லாகவும் மாற்றுமாறு செய்தல்.

## மதிப்பீடு

1. வேர்ச்சொல் என்றால் என்ன ?
2. வேர்ச்சொல்லின் முக்கியத்துவம் என்ன ?
3. பெயரெச்சம் என்றால் என்ன ?
4. வேர்ச்சொல் எப்படி வினைமுற்றுகளாக மாற்றமடைகின்றது என்பதை விளக்குக.


11th_General Tamil_RCM_TM.indd 38 8/14/2021 11:09:15 AM

# 16 பேச்சு வழக்கை எழுத்து வழக்காக மாற்றுதல்

## கற்றல் விளைவுகள்

- பேச்சு மொழி என்பதை அறிதல்
- எழுத்து மொழி என்பதை அறிதல்.
- பேச்சு மொழியில் இருந்து எழுத்து மொழி எவ்வாறு வளர்ச்சி அடைந்தது என்பதை அறிந்து உணர்தல்.
- பேச்சுமொழி எழுத்துமொழி வேறுபாடு அறிதல்.

## ஆசிரியர் செயல்பாடு

**ஆர்வமூட்டல் :**

மாணவர்களே! வணக்கம். இன்பா , நேற்று ஏன் பள்ளிக்கு வரவில்லை ( நேத்து எனக்கு ஒடம்பு சரியில்லை ஐயா). நீ கூறுவது பேச்சுவழக்கு அதை அப்படியே எழுத்து வழக்காக கூறு எனக் கேட்டு மாணவர்களை ஆர்வமூட்டல். (நேற்று எனக்கு உடம்பு சரியில்லை) – எழுத்து வழக்கு.

## கற்பித்தல் செயல்பாடுகள்

**செயல்பாடு : 1**

தனது எண்ணங்களையும் உணர்ச்சிகளையும் பிறருக்கு வெளிப்படுத்துவதற்காக மனிதனால் உருவாக்கப்பட்டது மொழி.

உலக மொழிகள் அனைத்தும் தோன்றிய நாள் முதல் இன்று வரை பல்வேறு மாற்றங்களைப் பெற்று வருகின்றன.

| மொழி | |
|---|---|
| பேச்சு மொழி | எழுத்து மொழி |
| ஒலிவடிவம் | வரிவடிவம் |

**செயல்பாடு : 2**

**பேச்சுமொழி :**

ஒருவருக்கு ஒருவர் நேர்நின்று கருத்தை வெளிப்படுத்தப் பயன்படுத்தும் ஒலி வடிவிலான குறியீட்டைப் பேச்சு மொழி என்று அழைக்கிறோம். பேச்சு மொழி உள்ளத்து உணர்ச்சியின் தூண்டுதல்களை இயல்பாக வெளிப்படுத்தும் ஆற்றல் வாய்ந்தது. இது எழுத்து மொழியில் இருந்து வேறுபட்டது. பேச்சு மொழியே முதலில் தோன்றியது. இதனால் மொழி என்பது அடிப்படையில் பேச்சையே குறிக்கும்.



11th_General Tamil_RCM_TM.indd 39 8/14/2021 11:09:15 AM

**எழுத்து மொழி :**

எழுத்து மொழிக்குப் பேச்சு மொழியே அடிப்படையாக அமைகின்றது. மக்கள் பேசும் மொழிக்கு ஏற்ற வரிவடிவத்தை உருவாக்கிக் கொண்டு எழுதப்பெறும் மொழி வழக்கை எழுத்து மொழி என்பர். பேச்சு மொழியை ஓடும் ஆறு என்றும் எழுத்து மொழியை ஆற்றில் மிதக்கும் பனிக்கட்டி போன்றது என்றும் குறிப்பிடுவர் அறிஞர்.

**காலம் கடந்து வாழும் தன்மை :**

பேச்சு மொழியை விட எழுத்து மொழியின் ஆயுட்காலம் மிகுதியாகும். குறிப்பிட்ட மொழியைப் பேசும் மக்கள் கூட்டம் அழிவுறும் போது அம்மொழியும் அழிந்து விடுகின்றது. சில நேரங்களில் பேச்சு மொழியில் நிகழும் மாற்றங்களால் அம்மொழி முற்றிலுமாக மற்றொரு மொழியாகத் திரிந்து விடுவதும் உண்டு. இந்த நிலையிலும் அந்த மொழியின் இயல்பைக் காலம் கடந்தும் காப்பாற்றுவது அம்மொழியின் எழுத்து மொழியே ஆகும்.

**சான்று :**

**இலக்கியங்கள், இலக்கணங்கள், கல்வெட்டுகள்.**

**செயல்பாடு : 3**

சிலர் பேச்சு வழக்கில் உள்ளவாறே எழுதும்பொழுதும் எழுதுகிறார்கள். இதனால் மொழிவளம் கெடுகின்றது. கீழே சில பேச்சு வழக்கு சொற்களுக்கான (வழூஉச் சொற்கள்) எழுத்து வழக்குச் சொற்களைக் காணலாம்.

| பேச்சு வழக்கு – | எழுத்து வழக்கு |
|---|---|
| ✍ அட மழை | அடை மழை |
| ✍ உசிர் | உயிர் |
| ✍ கடசி | கடைசி |
| ✍ நேத்து | நேற்று |
| ✍ சமயல் | சமையல் |
| ✍ சேதி | செய்தி |
| ✍ வெக்கம் | வெட்கம் |

**செயல்பாடு : 4**

**எழுத்து வழக்கை கற்பதற்கான வழிகள் :**

- சொற்களின் சரியான எழுத்து வடிவங்களை எழுதிப் பழகுதல்.
- தமிழ் அகராதி ஒன்றைப் புரட்டி ஐயத்தைப் போக்கிக் கொள்ளுங்கள். அகராதியைத் தவிரச் சிறந்த துணைவன் வேறு இல்லை .
- சொற்களைச் சேர்த்து எழுதும்போது ஒற்று சந்திப்பிழைகள் ஏற்படாத வண்ணம் எழுதிப் பழக வேண்டும்.
- இலக்கணப் பிழை, வாக்கியப் பிழை முதலியன இன்றி எழுதப் பழகிக் கொள்ளவேண்டும்.
- கலப்பு நடையைத் தவிர்த்தல் வேண்டும்.

**பேச்சு வழக்கு சொற்றொடரை எழுத்து வழக்கு சொற்றொடராக எவ்வாறு மாற்றுவது என்பதை சில சான்றுகள் மூலம் காணலாம்.**

| பேச்சு வழக்கு | எழுத்து வழக்கு |
| --- | --- |
| நீ நல்லா படிச்சு நல்ல மார்க் வாங்கணும் | நீ நன்றாக படித்து நிறைய மதிப்பெண் வாங்க வேண்டும் |
| நிலத்தக் கௌறணும்டா அப்பதான் வகுறு நிறையும் | நிலத்தை கிளற வேண்டும் அப்பொழுதுதான் வயிறு நிறையும் |
| அண்ணைக்கு அவனுக்குப் பணம் குடுத்து ஒதவியிருக்க வேண்டியதுதான | அன்றைக்கு அவனுக்குப் பணம் கொடுத்து உதவியிருக்க வேண்டியதுதானே? |
| வூட்டாண்ட வெளையாண்ட கொயந்தையை அப்பா எங்க இஸ்துகினு போனாரு | வீட்டிற்கு அருகில் விளையாடிய குழந்தையை அப்பா எங்கே கூட்டிக்கொண்டு போனார் ? |

## மாணவர் செயல்பாடு

பேச்சு வழக்கு சொற்றொடரை மாற்றி எழுத்து வழக்கு சொற்றொடராகக் கரும்பலகையில் எழுதச் சொல்லுதல்.

## மதிப்பீடு

1. பேச்சு வழக்கு என்றால் என்ன ?
2. எழுத்து வழக்கு என்றால் என்ன ?
3. பேச்சு வழக்கிற்கும் எழுத்து வழக்கிற்கும் உள்ள வேறுபாடு யாது ?



11th_General Tamil_RCM_TM.indd 41 8/14/2021 11:09:16 AM

# 17 மரபுப்பிழை நீக்கம்

## கற்றல் விளைவுகள்

- மரபுச் சொற்களை அறிதல்.
- விலங்குகள், பறவைகள், தாவரங்கள் ஆகியவற்றின் மரபுப் பெயர்களை அறிதல்.
- மரபு மாறி சொற்கள் அமைந்தால் ஏற்படும் பிழைகளை அறிந்து கொள்ளுதல்.

## ஆசிரியர் செயல்பாடு

**ஆர்வமூட்டல் :**

மாணவர்களே! வணக்கம். நம் வீட்டில் இருக்கும் விலங்குகளின் பெயர்கள் என்னென்ன ? (நாய், ஆடு, மாடு, பூனை) காட்டில் இருக்கும் விலங்குகளின் பெயர்கள் என்னென்ன ? (சிங்கம், புலி, கரடி, யானை) இவற்றில் உனக்கு பிடித்த ஏதாவது ஒரு விலங்கின் இளமைப் பெயரைக் கூறு என சில கேள்விகளைக் கேட்டு மாணவர்களை ஆர்வமூட்டல்.

## கற்பித்தல் செயல்பாடுகள்

**செயல்பாடு : 1**

- மரபு என்றால் வழக்கம் என்று பொருள். ஒரு பொருளை அறிவுடையவர்கள் (நம் முன்னோர்கள்) எந்த முறையால் எப்படி சொன்னார்களோ, அப்பொருளை அச் சொல்லால் அவர்கள் சொல்லிய முறையிலேயே சொல்வது மரபு ஆகும்.

  *"எப்பொருள் எச்சொல்லின் எவ்வாறு உயர்ந்தோர்*
  *செப்பினர் அப்படிச் செப்புதல் மரபே"*

  *– நன்னூல்*

- மரபு மாறிச் சொற்கள் வழங்குமாயின் இவ்வுலகத்துச் சொற்கள் எல்லாம் பொருளை இழந்து வேறுவேறாக ஆகிவிடும்.

  *"மரபுநிலை திரியின் பிறிது பிறிது ஆகும்"*

  *– தொல்காப்பியம்*

- உதாரணமாக பறவைகள், விலங்குகள் முதலான உயிரினங்களின் ஒலிகளையும் அவை ஒலிக்கும் முறைகளையும் இவ்வாறு கூற வேண்டும் என்று முன்னோர் கூறிய மரபினைத் தொன்றுதொட்டுப் பின்பற்றி வருகின்றனர்.

  **சான்று** : மயில் அகவ, குயில் கூவியது.

**மரபுகளின் சில வகைகள் :**

- ஒலி மரபு
- வினை மரபு
- இளமைப் பெயர்கள் (மரபு)
- இருப்பிடம் (மரபு)
- தாவர உறுப்பு (மரபு)
- ஆண் பெண் (மரபு)



11th_General Tamil_RCM_TM.indd 42 8/14/2021 11:09:16 AM

**செயல்பாடு : 2**

குறிப்பிட்ட சில மரபுகளின் பெயர்களை எடுத்துக்காட்டு மூலம் விளக்குதல்.

**ஒலி மரபு**

- **உயிரினம் – ஒலி**
- ஆந்தை – அலறும்
- எருது – எக்காளமிடும்
- யானை – பிளிறும்

**வினை மரபு (வினை செயல்)**

- **பொருள் – வினை**
- நீர் – குடித்தான்
- முறுக்கு – தின்றான்
- உணவு – உண்டான்

**இளமைப்பெயர்கள் (மரபு)**

**உயிரினம் இளமைப்பெயர்**

- புலி – பறழ்
- மான் – கன்று
- கரடி – குட்டி

**இருப்பிடம் (மரபு)**

- உயிரினம் – வாழ்விடம்
- குதிரை – கொட்டில்
- சிலந்தி – வலை
- குருவி – கூடு

**தாவர உறுப்பு (மரபு)**

- தாவரம் – உறுப்பு
- தென்னை – கன்று
- தாழை – மடல்
- கீரை – தண்டு

**விலங்குகளின் ஆண் பெண் (மரபு)**

| **உயிரினம்** | **ஆண்** | **பெண்** |
|---|---|---|
| யானை | களிறு | பிடி |
| நண்டு | அலவன் | பெடை |
| ஆடு | கிடா | மறி |
| புலி | போத்து | பிணை |

**செயல்பாடு : 3**

மரபுப் பிழையை எவ்வாறு நீக்குவது என்பதை எடுத்துக்காட்டு மூலம் விளக்குதல்.

**எடுத்துக்காட்டு :**

- முருகன் சோறு சாப்பிட்டு பால் குடித்தான்.
- முருகன் சோறு உண்டு பால் பருகினான்.

## மாணவர் செயல்பாடு

ஆசிரியர் தன்கையில் உள்ள விலங்குகளின் அட்டைப்படங்களைக் காட்டி ( யானை, கரடி, சிங்கம், நரி, ஆந்தை ) ஒவ்வொரு விலங்கின் ஒலி மரபை மாணவர்களிடம் கேட்டறிதல்.

## மதிப்பீடு

1. மரபுப் பெயர் என்றால் என்ன?
2. வினை மரபிற்குச் சில எடுத்துக்காட்டு தருக.
3. கீழ்க்காணும் தொடரில் உள்ள மரபுப் பிழையை நீக்கி எழுதுக.
   (i) பனை மட்டையால் கூரை வைத்திருந்தனர்.
   (ii) வாழைக் காட்டில் குயில்கள் அலறிக்கொண்டும் காகங்கள் கூவிக்கொண்டும் இருந்தன.

# 18 இலக்கிய நயம் பாராட்டல்

## கற்றல் விளைவுகள்

- கவிதைகளைச் சுவைத்துப் படித்தறிதல்.
- செய்யுளில் பயின்றுள்ள நயங்களைத் தெரிந்து கொள்ளல்.

## ஆசிரியர் செயல்பாடு

**ஆர்வமூட்டல் :**

பல வண்ணங்களில் தேர்ந்தெடுக்கப்பட்ட பூக்களால் தொடுக்கப்படும் பூமாலை அழகுடன் இருப்பதைப்போல சிறந்த சொற்களைக் கொண்டு தொடுக்கப்படும் பாமாலை சுவையாகவும் நயமாகவும் அமையும் என்று கூறி ஆர்வமூட்டல்.

## கற்பித்தல் செயல்பாடுகள்

**செயல்பாடு : 1**

தமிழ்க் கவிதைகள் கருத்தழகு மிகுந்தவை; பலவகை நயங்களையும் பெற்று படிப்போரின் ஆவலைத் தூண்டுபவை. சமகால சிக்கலையும் சமூக நலன் சார்ந்தும் பாடுபவை. எளிய நடையில் யாவருக்கும் புரியும் வண்ணம் அமைபவை. அவ்வாறு ஒரு செய்யுளில் அமைந்துள்ள மையக்கருத்து, திரண்ட கருத்து, தொடைநயம் (மோனை, எதுகை, இயைபு, முரண்) சொல் நயம், பொருள் நயம், சந்தநயம், அணிநயம், சுவை நயம் என கவினுற கட்டப்பட்டுள்ள பாமாலையில் தேனின் சுவை போன்று நயங்களைக் கண்டறிவது இலக்கிய நயம் பாராட்டல் ஆகும்.

காலக்கணிதம் என்னும் தலைப்பில் கவிஞர் கண்ணதாசன் இயற்றிய கவிதையில் பயின்றுள்ள இலக்கிய நயங்களைக் காண்போம்.

*கவிஞன் யானோர் காலக் கணிதம்*
*கருப்படு பொருளை உருப்பட வைப்பேன்!*
*புவியில் நானோர் புகழுடைத் தெய்வம்*
*பொன்னினும் விலைமிகு பொருளென் செல்வம்*
*இவைசரி யென்றால் இயம்புவதென் தொழில்*
*இவைதவ றாயின் எதிர்ப்பதென் வேலை!*
*ஆக்கல் அளித்தல் அழித்தல்இம் மூன்றும்*
*அவனும் யானுமே அறிந்தவை; அறிக !*

**செயல்பாடு : 2**

**மையக்கருத்து :**

கவிஞர் கண்ணதாசன், தனது படைப்பிலக்கியங்களைப் பொன்னினும் விலைமிகுந்ததாகக் குறிப்பிடுகிறார். புவியில் புகழுடன் விளங்குவதால், தன்னைத் தெய்வத்திற்கு நிகராக எண்ணிப் பாடியுள்ளார். ஆக்கல், காத்தல், அழித்தல் என்னும் இம்மூன்று பணிகளையும் கவிஞனும் செய்வதால், கடவுளையும் தன்னையும் ஒன்றெனக் கூறுகிறார்.

**திரண்ட கருத்து :**

கவிஞர் கண்ணதாசன் தன்னைக் காலக்கணிதம் என்று கூறுகிறார். தன் மனதில் தோன்றும் கருவை இலக்கியமாகப் படைப்பதில் வல்லவர் ஆவார். இவர் மறைந்தாலும் திரைப்படப் பாடல்கள்


11th_General Tamil_RCM_TM.indd 44 8/14/2021 11:09:16 AM

மூலமாகவும் மற்ற பிற நூல்களின் வழியாகவும் புகழுடன் இன்றும் என்றும் வாழும் தெய்வமாக உள்ளார் . தனது மனதிற்குத் தோன்றுவது சரி, தவறு என எதுவாயினும் வெளிப்படையாகக் கூறும் நெஞ்சுரம் மிக்கவராக விளங்கியுள்ளார். படைத்தல், காத்தல், அழித்தல் என்னும் இம்மூன்று தொழில்களும் கடவுளுக்கும் தனக்குமானது என்று கூறியுள்ளது கண்ணதாசனின் திறமையைக் கூறுவதாக அமைந்துள்ளது.

**செயல்பாடு : 3**

**தொடைநயம் :**

செய்யுளின் அடிகளிலோ, சீர்களிலோ எழுத்துகள் ஒன்றி வரத் தொடுப்பது தொடைநயம் ஆகும்.

**மோனைத்தொடை :**

செய்யுளின் அடியிலோ, சீரிலோ முதலெழுத்து ஒன்றி வரத் தொடுப்பது மோனைத் தொடையாகும். ஓரடியில் உள்ள சீர்தோறும் முதல் எழுத்து ஒன்றி வருவது சீர்மோனை எனவும், அடிதோறும் முதலெழுத்து ஒன்றி அமைவது அடிமோனை எனவும் அழைக்கப்படுகிறது.

**சான்று:**

**சீர்மோனை** : கவிஞன், காலம், கணிதம், புவி, புகழ்
**அடிமோனை** : புவி, பொன், ஆக்கல், அவனும்

**எதுகை :**

கவிதையின் அடிகளிலோ, சீர்களிலோ முதலெழுத்து அளவொத்து நிற்க, இரண்டாம் எழுத்து ஒன்றியமைவது. ஓரடியிலுள்ள சீர்கள் தோறும் முதலெழுத்து அளவொத்து நிற்க, இரண்டாம் எழுத்து ஒன்றி வருவது சீர் எதுகை என்றும் அடிதோறும் இரண்டாம் எழுத்து ஒன்றி அமைவது அடி எதுகை என்றும் வழங்கப்படுகிறது.

**சான்று:**

**சீர் எதுகை:** கருப்படு, பொருளை, அறிந்தவை, அறிக
**அடி எதுகை :** கவிஞன், புவியில், அவனும்,இவை, இவை

**இயைபுத்தொடை :**

அடிகள் தோறும் இறுதி எழுத்தோ, அசையோ , சீரோ, அடியோ ஒன்றியமைவது இயைபுத் தொடையாகும்.

**சான்று:**

கணிதம், தெய்வம், செல்வம், மூன்றும்.

**செயல்பாடு : 4**

**பொருள் நயம் :**

கண்ணதாசனின் இக்கவிதையில் "பொன்னினும் விலைமிகு பொருளென் செல்வம்" என்று எழுதியுள்ள வரிகள் பொருள் நயமிக்க வரியாக அமைந்திருப்பது போற்றுதலுக்குரியதாகும் .

**அணி :**

கவிஞர் தன்னைத்தானே புகழ்ந்து பாடியுள்ளதால், இக்கவிதையில் 'தன்மேம்பாட்டுரையணி' பயின்று வந்துள்ளது.

## மாணவர் செயல்பாடு

- செய்யுளில் பயின்றுள்ள இலக்கிய நயங்களைக் கண்டறிதல்.
- ஏற்புடைய இலக்கிய நயங்களை எழுதிப் பழகுதல்.

## மதிப்பீடு

1. ஏதேனும் ஒரு செய்யுளுக்கு இலக்கிய நயம் பாராட்டுக.
2. கண்ணதாசன் பற்றி சிறுகுறிப்பு வரைக.



11th_General Tamil_RCM_TM.indd 45 8/14/2021 11:09:16 AM

# 19 பா மற்றும் பா வகை அறிதல்

## கற்றல் விளைவுகள்

- பாக்களைப் பற்றி அறிந்து கொள்ளுதல்.
- பாவின் வகைகளைத் தெரிந்து கொள்ளுதல்.
- பாவின் மூலம் பாடல்கள் எப்படி எழுதுவது என்பதைப் புரிந்து கொள்ளுதல்.
- பாவினைப் பற்றி தெரிந்து கொண்டு பாடல் எழுதும் திறனை வளர்த்துக் கொள்ளுதல்.

## ஆசிரியர் செயல்பாடு

### ஆர்வமூட்டல் :

மாணவர்களிடம் ஒரு பாடலைப் பாடி இப்பாடல் எப்படி இயற்றுகிறார்கள் தெரியுமா ? எனக் கேட்டு பாடலை இயற்றும் முறையையும் பாடல் இயற்றுவதற்கு பாக்கள் எப்படி பயன்படுகிறது என்பதை எடுத்துக்கூறி முக்கியத்துவத்தை தெரியப்படுத்தி ஆர்வமூட்டல்.

## கற்பித்தல் செயல்பாடுகள்

### செயல்பாடு : 1

பா என்பது பாடல் அல்லது பண் என்ற பொருளில் அமையும். பாட்டு, பாடல், செய்யுள் என்ற பொருளிலும் அமையும். செய்யுள் அல்லது பாடல் எழுதுவதற்கு பா மிகவும் முக்கியமாகும்.

பா, செய்யுள், தூக்கு, கவிதை, பாட்டு ஆகியவை ஒரே பொருளில் வருவன. எழுத்து, அசை, சீர், தளை, அடி, தொடை, பாவின் உறுப்புகளாகும். பாக்களின் வகைகள் அப்பாக்களின் ஓசைகள் பாக்கள் இயற்றுவதற்குரிய விதிமுறைகள் முதலியவற்றை வெளிப்படுத்துவது யாப்பருங்கலக்காரிகை என்னும் நூலாகும். இது யாப்பு என்னும் கடலைக் கடக்க உதவும் நூலாக உள்ளது.

### செயல்பாடு : 2

#### பாவின் வகைகள் :

பாடல் இயற்றுவதற்குப் பயன்படக்கூடிய பா, பல வகைகளைக் கொண்டுள்ளது. தமிழ்ச் செய்யுள் வடிவங்கள் பெரும்பாலும் இசையை அடிப்படையாகக் கொண்டவை. ஓசையே தமிழ் செய்யுள்களை மெருகேற்றும். இவ்வோசை செய்யுளுக்கு மேலும் அழகு சேர்க்கிறது. இத்தகைய சிறப்புமிக்க பா நான்கு வகைப்படும். இந்த நான்கு வகை பாக்கள் மூலமே பாடல்கள் இயற்றப்படுகிறது.

#### பா வகைகள் :

- வெண்பா
- ஆசிரியப்பா
- வஞ்சிப்பா
- கலிப்பா



11th_General Tamil_RCM_TM.indd 46 8/14/2021 11:09:16 AM

**பா ஓசைகள் :**

- செப்பலோசை
- அகவலோசை
- தூங்கலோசை
- துள்ளலோசை

**வெண்பா :**

ஈற்றடி மூச்சீரும் ஏனைய அடி நாற்சீரும் பெற்றுவரும். மா முன் நிரை, விளம் முன் நேர், காய்முன் நேர் என்பனவாகிய வெண்பா தளைகளைப் பெற்று வரவேண்டும். வெண்பா புலவர்க்கு வன்பா. வெண்பா பாடுவது கடினம் ஆகும்.

**வெண்பா வகைகள் :**

- குறள்வெண்பா – 2 அடியில் அமைவது
- சிந்தியல் வெண்பா – 3 அடியில் அமைவது
- நேரிசை வெண்பா – 4 அடியில் வருவது
- பஃறொடைவெண்பா – 5 அடி முதல் 12 அடி வரை வரும்,
- கலிவெண்பா – 12 அடிகளுக்கு மேல் வரும்

இவற்றுள் குறள் வெண்பாவும், நேரிசை வெண்பாவும் பயில்வதற்கு எளிமையானது.

**செயல்பாடு : 3**

**ஆசிரியப்பா :**

பா இயற்றுவதற்கு உரிய எளிய வடிவமாக ஆசிரியப்பாவைக் கூறலாம் அகவலோசை பெற்றதால் ஆசிரியப்பாவை அகவற்பா என்றும் கூறுவர். ஆசிரியப்பா இரண்டு அசைகளால் அமையும் ஆசிரியப்பாக்களால் ஆன பாடல்களே சங்ககாலத் தமிழில் மிகுதியாக உள்ளன உரைநடை போன்று அமைவதே ஆசிரியப்பா. அகவலோசை கொண்டது. எல்லா அடிகளும் நான்கு சீர்களைப் பெற்று வரும், இயற்சீர் மிகுந்தும் பிறசீர் கலந்தும் வரும், ஆசிரியத் தளை மிகுந்தும் பிற தளைகள் கலந்தும் வரும். இறுதி அடியின் இறுதி எழுத்து ஏ என்னும் எழுத்தால் முடிவது சிறப்பு.

**ஆசிரியப்பாவின் வகைகள் :**

- நிலைமண்டில ஆசிரியப்பா – எல்லா அடிகளும் நாற்சீராய் வரும்.
- அடிமறி மண்டில ஆசிரியப்பா – அடிகளை மாற்றினாலும் ஓசையும் பொருளும் மாறாது.
- நேரிசை ஆசிரியப்பா – ஈற்றடி முச்சீரும் ஏனைய அடிகள் நாற்சீராய் வரும்.
- இணைக்குறள் ஆசிரியப்பா – முதல் அடியும் இறுதியடியும் நாற்சீரும் இடையடிகள் இருசீர், முச்சீரும் பெற்று வரும்.

## மாணவர் செயல்பாடு

ஒரு மாணவனை வெண்பாவின் இலக்கணத்தைப் பயன்படுத்தி ஒரு பாடல் எழுதுமாறு கூறி அவன் படைப்பாற்றல் திறனை வளர்த்தல்.

## மதிப்பீடு

1. பா என்றால் என்ன ?
2. பா எத்தனை வகைப்படும் ?
3. வெண்பா எத்தனை வகைப்படும் ?

# 20 திணை

## கற்றல் விளைவுகள்

- திணைக்குப் பொருள் என்ன என்பதை அறிதல்.
- அகத்திணை, புறத்திணை பற்றி தெரிந்து கொள்ளுதல்.
- இலக்கியங்களுக்கு இலக்கணங்கள் சான்றாக அமைந்துள்ளதைத் தெரிந்துகொள்ளுதல்.

## ஆசிரியர் செயல்பாடு

**ஆர்வமூட்டல் :**

தினை, திணை ஆகிய சொற்களுக்குப் பொருள் என்ன? என்பதை மாணவர்களிடம் கேள்வி கேட்டு, தினை –தானியம், திணை –ஒழுக்கம் என்று பதிலைப் பெற வேண்டும். மேலும், ஒழுக்கத்தைக் குறிக்கும் திணையைப்பற்றி நீங்கள் அறிந்த செய்தியைக் கூறுங்கள் என மாணவர்களை ஆர்வமூட்டல்.

## கற்பித்தல் செயல்பாடுகள்

**செயல்பாடு : 1**

திணை என்பது குலம், நிலம், ஒழுக்கம் ஆகிய பல பொருள்களைக் குறிக்கும் ஒரு சொல். திணையைச் சொல் பாகுபாடு முறையில் இரண்டு வகையாகப் பிரிக்கலாம். இதனைக் கீழ் வகுப்பில் படித்து இருப்பீர்கள். அவை உயர்திணை, அஃறிணை.

**திணையைப் பொருள் பாகுபாட்டு முறையில் இரண்டு வகையாகப் பிரிக்கலாம். அவை,**

- அகத்திணை (வாழ்வியல்)
- புறத்திணை (உலகியல்)

வாழ்க்கை நிகழ்வுகளைத் தமிழ் இலக்கண நூல்கள் அகம், புறம் என இரண்டு பொருள்களாகப் பகுத்துக் கொண்டுள்ளன.

அகம் என்பது திருமணத்திற்கு முந்தைய களவு நிலையிலும் திருமணத்திற்குப் பிந்தைய கற்பு நிலையிலும் நிகழும் வாழ்வியல் நிகழ்வு பற்றியது. இதனையே அகத்திணை என்பர்.

புறம் என்பது புறத்தார்க்குப் புலனாகும் வாழ்க்கை. இதனைப் புறத்திணை என்பர்.

**அகத்திணை ( வாழ்வியல்) :**

- குறிஞ்சி
- முல்லை
- மருதம்
- நெய்தல்
- பாலை
- கைக்கிளை
- பெருந்திணை.



11th_General Tamil_RCM_TM.indd 48 8/14/2021 11:09:16 AM

**புறத்திணை (உலகியல்) :**

- ✍ வெட்சி
- ✍ கரந்தை
- ✍ வஞ்சி
- ✍ காஞ்சி
- ✍ நொச்சி
- ✍ உழிஞை
- ✍ தும்பை
- ✍ வாகை
- ✍ பாடாண்
- ✍ பொதுவியல்
- ✍ கைக்கிளை
- ✍ பெருந்திணை.

இவை புறப்பொருள் வெண்பாமாலையில் குறிப்பிடப்படும் திணைகள் ஆகும். புறப்பொருளைத் தொல்காப்பியம் ஏழு திணைகளாகப் பகுத்துக் காட்டுகிறது.

**அவை பின்வருமாறு**

| புறத்திணை | – அகத்திணை |
|---|---|
| • வெட்சி | • குறிஞ்சி |
| • வஞ்சி | • முல்லை |
| • உழிஞை | • மருதம் |
| • தும்பை | • நெய்தல் |
| • வாகை | • பாலை |
| • காஞ்சி | • பெருந்திணை |
| • பாடாண் | • கைக்கிளை |

**செயல்பாடு : 2**

குறிப்பிட்ட சில திணைகளை எடுத்துக்காட்டு மூலம் விளக்குதல்.

புறத்திணைக்குச் சான்றாக பாடாண்திணையைச் சான்றுடன் இங்கு பார்க்கலாம்.

**திணை:** பாடாண் திணை

**திணை விளக்கம் :**

ஒருவருடைய புகழ், வலிமை, கொடை, அருள் போன்ற நல்லியல்புகளைச் சிறப்பித்துக் கூறுவது பாடாண் திணை.

**சான்று :**

*'பதிபிழைப்பு அறியாது துய்த்தல் எய்தி*
*நிரையம் ஒரீஇய வேட்கைப் புரையோர்'*
*(பதிற்றுப்பத்து)*

**சான்று விளக்கம் :**

சேரலாதனே, உன் குடிமக்கள் எப்பொழுதும் நல்ல செயல்களையே செய்து வருபவர்கள் பசி, பிணி அறியாத அவர்கள் நாட்டை விட்டுப் புலம் பெயராமல் உன் நாட்டிலேயே சுற்றத்தாரோடு வாழ விரும்புவர். அவ்வாறான குடிமக்களால் நீ போற்றப்படுகிறாய்.

இப்பெரிய நிலவுலகில் வாழும் அனைத்து உயிர்களுக்கும் இடையறாது கொடுக்கும் பண்புடையவனே, நீ சான்றோர்களுக்கு அரிய பொருள்கள் நல்குவாய். எப்பொழுதும் விழாக்கள் நிகழும் நாட்டிற்கு நீ உரிமை உடையவன். நெடியோன் போன்ற புகழினை உடைய உன் நாட்டின் வளத்தையும் பகை நாட்டின் அழிவையும் கண்டு வியப்படைகிறேன்.

**திணைப் பொருத்தம் :**

"சேரநாடு செல்வ வளம் மிக்கது. இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன் தன் நாட்டையும் மக்களையும் கண்ணெனக்காத்தான்" என்பது போன்ற இமயவர்மன் நெடுஞ்சேரலாதனின் உயர் பண்புகளைப் போற்றுவதாக இப் பதிற்றுப்பத்துப் பாடலைக் குமட்டூர் கண்ணனார் படைத்துள்ளமையால் பாடாண் திணையாயிற்று.


11th_General Tamil_RCM_TM.indd 49 8/14/2021 11:09:16 AM

**செயல்பாடு : 3**

அகத்திணைக்குச் சான்றாக குறிஞ்சித் திணையைச் சான்றுடன் விளக்குதல்.

**திணை : குறிஞ்சி திணை**

**முதற்பொருள் :**

**நிலம்** : மலையும் மலை சார்ந்த இடமும்
**பொழுது** : பெரும்பொழுது – குளிர்காலம், முன்பனிக்காலம்
சிறுபொழுது – யாமம்.

**கருப்பொருள் :**

- தெய்வம் – முருகன்
- மக்கள் – குறவர், குறத்தியர்
- தொழில் – தேனெடுத்தல், கிழங்கு அகழ்தல்
- உணவு – மலைநெல், தினை
- பறவை – கிளி, மயில்
- விலங்கு – புலி,கரடி,சிங்கம்
- பூ – குறிஞ்சி, காந்தள்

**உரிப்பொருள்:**

புணர்தலும் புணர்தல் நிமித்தமும்

**சான்று:**

" அம்ம வாழி தோழி நம்மூர்ப்
பிரிந்தோர்ப் புணர்ப்போர் இருந்தனர்"
(குறுந்தொகை)

**சான்று விளக்கம் :**

தலைவன் தலைவியை மணம் முடிப்பது பற்றிப் பேச சான்றோரை அனுப்புகிறான். தலைவி, அப்போது எங்கே தன் பெற்றோர் மணம் பேச மறுத்து விடுவார்களோ என்று கலங்குகிறாள். இந்நிலையில் தோழி அவளிடம் தலைவனின் தரப்பைத் தலைவியின் பெற்றோர் ஏற்றுக் கொண்டனர் என்று தேற்றுகிறாள்.

**திணைப்பொருத்தம் :**

இப்பாடலில் 'புணர்ப்போர்' என்ற வார்த்தை, குறிஞ்சித்திணைக்குரிய உரிப்பொருள் புணர்தலைக் குறிக்கிறது. எனவே இப்பாடல் குறிஞ்சித்திணைக்குரிய சான்றாகும்.

## மாணவர் செயல்பாடு

அகத்திணை, புறத்திணைச் சார்ந்த பாடல்களை மாணவர்களுக்குக் கொடுத்துத் திணையைச் சான்றுடன் விளக்கி எழுதச் சொல்லுதல்.

## மதிப்பீடு

1. திணை என்ற சொல்லுக்குப் பொருள் என்ன?
2. திணை எத்தனை வகைப்படும்? அவை யாவை?
3. உனக்குத் தெரிந்த புறத்திணைப் பாடல் ஏதேனும் ஒன்றைச் சான்றுடன் விளக்குக.



11th_General Tamil_RCM_TM.indd 50 8/14/2021 11:09:16 AM

# 21 துறை

## கற்றல் விளைவுகள்

- துறையின் வரையறையைப் பற்றி அறிதல்.
- அகத்திணையில் வரும் துறைகளைப் பற்றி அறிதல்.
- புறத்திணையில் வரும் துறைகளைப் பற்றித் தெரிந்து கொள்ளுதல்.

## ஆசிரியர் செயல்பாடு

**ஆர்வமூட்டல் :**

மாணவர்களே! இன்று துறையைப்பற்றி பார்ப்போம். துறை என்றதும் கல்வித்துறை, நிதித்துறை, சட்டத்துறை போன்ற துறைகள் நினைவுக்கு வரலாம். ஆனால், நாம் இன்றைக்குப் பார்க்க இருப்பது திணையின் உட்பிரிவு ஆகிய துறையைப் பற்றி என்று விளக்கி மாணவர்களுக்கு ஆர்வமூட்டல்.

## கற்பித்தல் செயல்பாடுகள்

**செயல்பாடு :**

துறை என்பது ஒரு சிறிய பிரிவு அல்லது பகுப்பு ஆகும் இது இடம், கடல் துறை, நீர்த்துறை, நீராடுதுறை, பொருள் கூறு வகை, ஒழுங்கு , உபாயம் என்று பல பொருள் பெறும்.

திணை என்னும் சொல் வாழ்க்கை ஓடும் ஒழுகலாற்றினைக் குறிக்கும். ஒழுகும் ஆறு ஒழுகலாறு. ஆற்றில் இறங்கிப் பயன்படுத்தும் இடத்தைத் துறை என்கிறோம். அதுபோல வாழ்க்கையில் அமைந்து கிடப்பனவே இலக்கியத் துறைகள். இந்த இலக்கிய துறைகளை வகுத்துக் காட்டுவனவே இலக்கணத் துறைகள். அதாவது இலக்கணம் காட்டும் துறைகள்.

- தொல்காப்பியம் புறத்திணையில் தான் வகுத்துக்கொண்ட ஏழு திணைகளுக்கும் துறை சுட்டுகிறது.
- புறப்பொருள் வெண்பாமாலை தன்போக்கில் வகுத்துக்கொண்ட 12 திணைகளுக்கும் துறைகளைக் காட்டுகிறது.

**செயல்பாடு : 2**

குறிப்பிட்ட சில துறைகளை எடுத்துக்காட்டு மூலம் விளக்குதல்.

புறத்திணையாகிய பாடாண்திணைக்குத் துறையாக செந்துறைப் பாடாண்பாட்டு வந்தமைந்ததைக் கீழ்க்காணும் எடுத்துக்காட்டு மூலம் தெரிந்து கொள்ளலாம்.

**துறை:** செந்துறைப் பாடாண்பாட்டு

**துறை விளக்கம்:**

உலகில் இயற்கை வகையால் இயன்ற மக்களைப் பாடுவது செந்துறை. இது செந்துறைப் பாடாண்பாட்டு எனவும் வழங்கப்பெறும்.

**சான்று :**

"மண்ணுடை ஞாலத்து மன்னுயிர்க்கெஞ்சாது
ஈத்துக்கை தண்டாக் கைகடும் துப்பின்"

(பதிற்றுப்பத்து)



11th_General Tamil_RCM_TM.indd 51 8/14/2021 11:09:16 AM

**துறைப் பொருத்தம்:**

இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன் ஆட்சியின்கீழ் மக்கள் மகிழ்ச்சியாக வாழ்கின்றனர் என்று பாடியதால் இப்பாடல் செந்துறைக்குச் சான்றாயிற்று.

**செயல்பாடு : 3**

**துறை**: முதுமொழிக் காஞ்சித் துறை

முதுமொழி என்பது அறிவு முதிர்ச்சியில் மொழியும் சொல்.

**துறை விளக்கம்:**

அறம், பொருள், இன்பம் என்னும் முப்பொருளினது உறுதி தரும்

தன்மையைக் கூறுதல்.

**சான்று:**

"நீரின்றி அமையா யாக்கைக்கு எல்லாம்
உண்டி கொடுத்தோர் உயிர்க் கொடுத்தோரே"

(புறநானூறு)

**சான்று விளக்கம்:**

உடம்பானது உணவால் அமைந்த பிண்டம். உடம்பில் உயிர் இருக்க வேண்டுமென்றால் உணவு வேண்டும். உண்ணும் உணவு நிலமும் நீரும் இணைந்த கூட்டுப் பொருள். நிலத்தில் நீரைச் சேர்த்து வைத்தால், உணவு பொருளின் விளைச்சலைப் பெருக்கலாம். எனவே நிலத்தில் நீர் தங்கும்படி சேமித்து வைத்தவர் உடலில் உயிரைப் படைத்தவர் ஆவார்.

**துறைப்பொருத்தம்:**

மற்றவர்கள் பெறும் புகழை விட நீர்நிலைகளைப் பெருக்கியவரின் பெயர் இவ்வுலகில் உயிர்க்கொடுத்தோர் பட்டியலில் என்றென்றும் நிலைத்திருக்கும். எனவே, 'நிலத்தில் நீர்நிலைகளைப் பெருகச் செய்க' என்று குடபுலவியனார், நெடுஞ்செழியனுக்கு அறிவுரை கூறுவதால், இப்பாடல் முதுமொழிகாஞ்சித் துறைக்குச் சான்றாகும்.

**செயல்பாடு : 4**

**துறை:**

அகத்திணை ஆகிய குறிஞ்சித் திணையில் தலைவியிடம் தோழி கூறியது.

**துறை விளக்கம்:**

தலைவன் சான்றோரைத் தலைவியின் தமர் பால் மணம் பேசி வர விடுப்ப, தன் தமர் மறுப்பாரோ என்று அஞ்சிய தலைவியை நோக்கி, "தலைவன் வரைவை நமர் ஏற்றுக் கொண்டனர். நீ கவலை ஒழிவாயாக" என்று தோழி கூறியது.

**சான்று:**

"அம்ம வாழி தோழி நம்மூர்ப்
பிரிந்தோர்ப் புணர்ப்போர் இருந்தனர்..."

(குறுந்தொகை)

**சான்று விளக்கம்:**

தலைவன் தலைவியை மணம் முடிப்பது பற்றி பேச சான்றோரை அனுப்புகிறான். தலைவி அப்போது எங்கே தன் பெற்றோர் மணம் பேச மறுத்து விடுவார்களோ என்று கலங்குகிறாள். இந்நிலையில் தோழி அவளிடம் தலைவனின் தரப்பைத் தலைவியின் பெற்றோர் ஏற்றுக் கொண்டனர் என்று தேற்றுகிறாள்.

**துறைப்பொருத்தம்:**

தலைவனின் தரப்பை உன் நமர் ஏற்றுக்கொண்டனர். நீ கவலை ஒழிவாயாக என்று தலைவியிடம் தோழி கூறியது இத்துறைக்குப் பொருந்துவதாக அமைகிறது.

## மாணவர் செயல்பாடு

அகத்திணை புறத்திணை சார்ந்த பாடல்களை மாணவர்களுக்குக் கொடுத்து துறையைச் சான்றுடன் விளக்கி எழுதச் சொல்லுதல்.

## மதிப்பீடு

1. துறை என்ற சொல்லுக்குப் பொருள் என்ன?
2. துறை சிறுகுறிப்பு வரைக.
3. முதுமொழிக்காஞ்சி துறையைச் சான்றுடன் விளக்குக.



11th_General Tamil_RCM_TM.indd 53 8/14/2021 11:09:17 AM

# 22 அணிகள்

## கற்றல் விளைவுகள்

- 'அணி' பொருள் பற்றி அறிதல்.
- அணியின் விளக்கம் மற்றும் வகைகளைப் புரிந்துகொள்ளுதல்.
- உவமை அணியின் தன்மையை உணரச் செய்தல்.
- வேற்றுமை அணியின் விளக்கம் அறிந்து பயன்படுத்தும் திறன் பெறுதல்.

## ஆசிரியர் செயல்பாடு

**ஆர்வமூட்டல் :**

- பொதுவாகவே நகைகளை அதிகமாக அணிந்திருப்பவர்கள் ஆண்களா ? பெண்களா ?
- நகைகளை வேறு எவ்வாறு அழைக்கலாம் ?
- திருமண விழாக்களில் குறிப்பாக மணப்பெண்ணுக்கு அலங்காரம் செய்பவர்கள் பணியமர்த்தப்படுகிறார்களே ஏன்?

இது போன்ற வினாக்களை எழுப்பி பல்வேறு விடைகள் கிடைப்பதன் மூலம் பாடப்பகுதியைத் தொடர்புபடுத்தி ஆர்வமுடன் கற்கச் செய்யலாம்.

## கற்பித்தல் செயல்பாடுகள்

**செயல்பாடு : 1**

**'அணி' பொருள்:**

அணி என்றாலும் அலங்காரம் என்றாலும் ஒன்றே. அணி என்பது தமிழ்ச்சொல். அலங்காரம் என்பது வடமொழிச்சொல். அணி என்பதற்கு வனப்பு என்று பொருள் (பல அழகு ஒன்று கூடியது வனப்பு). வனப்பு என்றாலும் அழகு என்றாலும் ஒன்றே என்று கூறுவாரும் உளர். அதாவது அகப்பொருள், புறப்பொருள் என்ற இரண்டிற்கும் இடம் செய்யுள் ஆகும். ஆகவே, செய்யுளை அழகுபடுத்தி அதன் பொருளைத் தெளிவாக எடுத்துரைக்கவே அணிகள் தோன்றின. எனவே செய்யுளின் கருத்தை அழகுற விளக்குவது அணியாகும்.

**செயல்பாடு : 2**

**அணி விளக்கம் மற்றும் வகைகள்:**

அணி இலக்கண நூல்கள் பல தமிழில் இருந்தாலும் 'தண்டி' எழுதிய 'தண்டியலங்காரம்' என்ற அணி இலக்கண நூலே சிறப்பாகத் திகழ்கிறது. அணிகள் குண அணி, பொருள் அணி, சொல் அணி என மூன்று வகைப்படும். குண அணி பொருத்தவரை பொது அணி என்றும் கூறுவர். குண அணியும், சொல் அணியும் பெரும்பாலும் வழக்கொழிந்து போய்விட்டன. பொருளணியே இன்றும் மிகுதியாக புழக்கத்தில் உள்ளது. பொருள் அணியாகத் தண்டியலங்காரம் 35 அணிகளைக் கூறுகிறது. நம் பாடப்பகுதியில் உள்ள சில அணிகளைக் காண்போம்.



11th_General Tamil_RCM_TM.indd 54 8/14/2021 11:09:17 AM

### செயல்பாடு : 3

### உவமையணி விளக்கம் :

'இது அது போல் உள்ளது' என்று கூறுவது உவமை ஆகும். இதில் உவமை, உவம உருபு, பொதுத்தன்மை, பொருள் என்ற நான்கு உறுப்புகள் அமைந்திருக்கும். உவமையை 'உவமானம்' என்றும், பொருளை 'உவமேயம்' என்றும் கூறுவர்.

### அணியிலக்கணம் :

உவமானம் ஒரு தொடராகவும் உவமேயம் மற்றொரு தொடராகவும் அமைந்து 'போல' என்ற உவம உருபு வெளிப்படையாக வருவது உவமை அணியாகும்.

**சான்று :**

"அகழ்வாரைத் தாங்கும் நிலம்போலத் தம்மை
இகழ்வார்ப் பொறுத்தல் தலை."

### சான்று பொருத்தம் :

- உவமானம் : அகழ்வாரைத் தாங்கும் நிலம்
- உவமேயம் : தம்மை இகழ்வார்ப் பொறுத்தல் தலை
- உவம உருபு : போல

### சான்று விளக்கம் :

தன்னைத் தோண்டுபவரையும் தாங்கும் நிலம் போலத் தனக்கு தீங்கு செய்பவர்களையும் பொறுத்துக்கொள்வதே தலை சிறந்த பண்பாகும்.

### செயல்பாடு : 4

### வேற்றுமை அணி விளக்கம்:

வெளிப்படையாகவும் குறிப்பாகவும் ஒற்றுமை உடைய இரு பொருள்களுக்கு இடையே வேற்றுமை இருப்பதாக கூறுவது வேற்றுமையணி ஆகும். அதனை இரண்டு வகையாகப் பிரிக்கலாம்.

- கூற்று வேற்றுமையணி
- குறிப்பு வேற்றுமையணி

### பிறிது மொழிதல் அணி:

**அணி இலக்கணம்:**

கவிஞர் தான் கூறக் கருதும் பொருளை வெளிப்படையாகக் கூறாமல் பிறிதொன்றின் மீது ஏற்றிக் கூறுவது பிறிது மொழிதல் அணியாகும்.

**சான்று:**

"பீலிபெய் சாகாடும் அச்சிறும் அப்பண்டம்
சால மிகுத்துப் பெயின்."

### சான்று விளக்கம்:

மயிலிறகு சிறிதாக இருந்தாலும் அதிகமாக வண்டியில் ஏற்றினால் வண்டியானது பாரம் தாங்காமல் அச்சாணி முறிந்து விடும் என வெளிப்படையாகக் கூறிவிட்டு, பிறிதொரு பொருளாக பகைவர்கள் சிறியவர்களாக இருந்தாலும், பகைவர்களின் எண்ணிக்கை அதிகமானால் நம்மை எளிதில் வென்று விடுவார்கள்.



11th_General Tamil_RCM_TM.indd 55 8/14/2021 11:09:17 AM

## மாணவர் செயல்பாடு

மாணவர்களுக்கு அணிகள் இடம்பெறும் சில திருக்குறளைக் கொடுத்து இவற்றில் எந்த அணிகள் இடம் பெற்றுள்ளன என்பதைக் கண்டறியச் செய்தல். சில அணிகளுக்கு சான்று, சான்று விளக்கம், அணி இலக்கணம் எழுதவும் செய்தல்.

## மதிப்பீடு

1. 'அணி' பொருள் வரையறு.
2. 'அலங்காரம்' என்பது எம்மொழிச்சொல் ?
3. அணி இலக்கணம் கூறும் சிறப்பான நூல் ஒன்றினை கூறுக ?
4. உவமை அணியின் இலக்கணம் கூறுக ?
5. பிறிதுமொழிதல் அணி சான்று தருக ?

# 23 முதற்பொருள், கருப்பொருள், உரிப்பொருள்களைப் பற்றி அறிதல்

## கற்றல் விளைவுகள்

- ஐவகை நிலங்களையும், அந்நிலங்களில் வாழ்ந்த மக்களின் வாழ்க்கை
- நிலைகளையும் அறிதல்.
- முதற்பொருள், கருப்பொருள், உரிப்பொருள் பற்றித் தெரிந்து கொள்ளுதல்.

## ஆசிரியர் செயல்பாடு

**ஆர்வமூட்டல் :**

ஐவகை நிலம் என்பது யாது? என்று மாணவர்களிடம் கேள்வி கேட்டு குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என பதிலைப் பெற வேண்டும். அந்நிலங்களில் வாழ்ந்த அக்கால மக்களின் வாழ்க்கை நிலையை முதற்பொருள், கருப்பொருள், உரிப்பொருள் என மூன்று வகைகளாகப் பிரித்து காட்டியுள்ளனர் என மாணவர்களுடன் கலந்துரையாடி ஆர்வமூட்டல்.

## கற்பித்தல் செயல்பாடுகள்

**செயல்பாடு : 1**

அகவாழ்க்கையில் நிகழும் செயல்பாடுகளை (ஒழுக்கங்களை) ஐந்து பெரும் பிரிவுகளில் அடக்கி, அவற்றுக்கு நில அடிப்படையில் குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை போன்ற பெயர்களை அமைத்தனர். அவ்வாறு வகுக்கப்பட்ட ஐந்து திணைகளுக்கும் அடிப்படையாக அமையும் பொருள்களை முதற்பொருள், கருப்பொருள், உரிப்பொருள் என மூவகைப்படுத்துவர்.

**முதற்பொருள் :**

முதன்மையும் அடிப்படையுமான பொருள் முதற்பொருள் எனப்பட்டது. மலை முதலான நிலங்களும், மாலை முதலான பொழுதுகளும் முதற்பொருள் ஆகும். ஆகவே, முதற்பொருள் நிலம், பொழுது என இருவகைப்பட்டது .

**திணையும் நிலமும் :**

நிலம் என்பது முதற்பொருளின் பகுதி. குறிஞ்சி முதலான ஐந்து திணைகளுக்கும் உரிய நிலங்கள் பின்வருமாறு.

- குறிஞ்சி – மலையும் மலை சார்ந்த இடமும்
- பாலை – மணலும் மணல் சார்ந்த இடமும்
- முல்லை – காடும் காடு சார்ந்த இடமும்
- மருதம் – வயலும் வயல் சார்ந்த இடமும்
- நெய்தல் – கடலும் கடல் சார்ந்த இடமும்



11th_General Tamil_RCM_TM.indd 57 8/14/2021 11:09:17 AM

### செயல்பாடு : 2

### திணையும் பொழுதும் :

பொழுது என்பது காலத்தைக் குறிக்கும். அவை சிறுபொழுது, பெரும்பொழுது என இரு வகைப்படும்.

### சிறுபொழுது :

**இது ஒரு நாளின் சிறு பிரிவு.**

- வைகறை (அதிகாலை நேரம்) – இரவு 2 மணி முதல் காலை 6 மணி வரை
- காலை – காலை 6 மணி முதல் முற்பகல் 10 மணி வரை
- நண்பகல் – முற்பகல் 10 மணி முதல் பிற்பகல் 2 மணி வரை
- எற்பாடு (எல் + பாடு) (சூரியன் மறையும் நேரம்) – பிற்பகல் 2 மணி முதல் மாலை 6 மணி வரை
- மாலை – மாலை 6 மணி முதல் இரவு 10 மணி வரை
- யாமம் (நள்ளிரவு) – இரவு 10 மணி முதல் நள்ளிரவு 2 மணி வரை

### பெரும்பொழுது :

**இது ஓர் ஆண்டின் உட்பிரிவு ஆகும்.**

- இளவேனில் – சித்திரை, வைகாசி
- முதுவேனில் – ஆனி, ஆடி
- கார்காலம் – ஆவணி, புரட்டாசி
- கூதிர் காலம் – ஐப்பசி, கார்த்திகை
- முன்பனிக்காலம் – மார்கழி , தை
- பின்பனிக்காலம் – மாசி, பங்குனி

ஐந்து திணைகளுக்கும் உரிய சிறுபொழுது, பெரும்பொழுதுகள் எவையெவை என்பதைக் கீழ்வரும் அட்டவணை விளக்கும்.

| நிலம் அல்லது திணை | சிறுபொழுது | பெரும்பொழுது |
|---|---|---|
| குறிஞ்சி | யாமம் | கூதிர், முன்பனி |
| முல்லை | மாலை | கார்காலம் |
| மருதம் | வைகறை | பெரும்பொழுதுகள் ஆறும் |
| நெய்தல் | எற்பாடு | பெரும்பொழுதுகள் ஆறும் |
| பாலை | நண்பகல் | இளவேனில், முதுவேனில் |



11th_General Tamil_RCM_TM.indd 58 8/14/2021 11:09:17 AM

### செயல்பாடு : 3

**கருப்பொருள்கள் :**

ஐந்து திணைகளுக்கும் உரிய நிலங்களில் வாழும் உயிரினங்களும் வழங்கும் பொருள்களும் கருப்பொருள் என வழங்கப்படுகின்றன. கருப்பொருள் பதினான்கு வகைப்படும். அவை

- தெய்வம்
- உயர்ந்தோர்
- தாழ்ந்தோர்
- பறவை
- விலங்கு
- ஊர்
- நீர்
- பூ
- மரம்
- உணவு
- பறை
- யாழ்
- பண்
- தொழில்.

### செயல்பாடு : 4

**உரிப்பொருள் :**

மக்களின் அகவாழ்க்கைக்கு உரிய உணர்ச்சிகள் அல்லது மன உணர்வுகளே உரிப் பொருள்கள்.

மனித உள்ளங்களில் மட்டுமல்லாது ஐவகை நிலத்திற்கு உரியவை என்னும் பொருளில் 'உரிப்பொருள்' என்று பெயர் வைத்துக் கூறப்பட்டது.

ஐந்து நிலத்திணைகளுக்கும் அவற்றின் இயல்புக்கு ஏற்ப உரிப்பொருள்கள் உள்ளன. அவை பின்வருமாறு.

- குறிஞ்சி – புணர்தலும் புணர்தல் நிமித்தமும்
- பாலை – பிரிதலும் பிரிதல் நிமித்தமும்
- முல்லை – இருத்தலும் இருத்தல் நிமித்தமும்
- மருதம் – ஊடலும் ஊடல் நிமித்தமும்
- நெய்தல் – இரங்கலும் இரங்கல் நிமித்தமும்

## மாணவர் செயல்பாடு

ஐவகை திணைகளையும் தனித்தனியே எழுதி, அதற்கு முதற்பொருள், கருப்பொருள், உரிப்பொருள் ஆகியவற்றை எழுதச் சொல்லுதல்.

## மதிப்பீடு

1. பொழுது எத்தனை வகைப்படும்? அவை யாவை ?
2. ஐவகை நிலங்களுக்குரிய உரிப் பொருள்கள் யாவை ?
3. குறிஞ்சி நிலத்திற்கு உரிய கருப்பொருள்களைக் கூறுக.



11th_General Tamil_RCM_TM.indd 59 8/14/2021 11:09:17 AM

# 24 பழமொழி வாழ்க்கை நிகழ்வு

## கற்றல் விளைவுகள்

- தமிழரின் பண்பாட்டையும் கலாச்சாரத்தையும் பழமொழி பிரதிபலிக்கும் என்பதை அறிதல்.
- தமிழரின் வாழ்க்கை முறை பழமொழியோடு தொடர்புடையது என்பதைத் தெரிந்து கொள்ளுதல்.
- பழமொழி மூலம் மனிதர்களிடம் நற்பண்புகளை வளர்க்க முடியும் என்பதைப் புரிந்து கொள்ளுதல்.

## ஆசிரியர் செயல்பாடு

**ஆர்வமூட்டல் :**

மாணவர்களிடம் ஒரு பழமொழியைக் கூறி அதற்கான விளக்கத்தைக் கேட்டு அவர்களை ஆர்வமூட்டுவது. 'ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையுமா?' என்ற பழமொழியைக் கூறி மாணவர்களை இந்த பழமொழி எதை கூறுகிறது என்றால் சிறு வயதில் நாம் எதையும் செய்ய முடியும் நம்முடைய உடல், மனம், மெய் அனைத்தும் நம் சொல்படி கேட்கும். ஆனால் வயதானால் நம்மால் எதையும் செய்ய முடியாது, அதனால்தான் நாம் இளம் வயதில் கல்வியைக் கற்று உயர முடியும் எனக்கூறி ஆர்வமூட்டல்.

## கற்பித்தல் செயல்பாடுகள்

**செயல்பாடு : 1**

பழமொழியைத் தொல்காப்பியம் முதுசொல் என்று கூறுகிறது. பழமொழி பண்டைய தமிழர்களின் வாழ்வியலோடு பின்னிப் பிணைந்து இருக்கிறது. பண்டையத் தமிழர்களின் பண்பாட்டோடும் கலாச்சாரத்தோடும் நெருங்கிய தொடர்புடையது. பழமொழிகள் மூலம் தமிழர்கள் நற்பண்புகளையும் நல்ல வாழ்வியல் முறைகளையும் வளர்த்துக்கொண்டனர்.

பழமொழிகள் நம் தமிழர்களின் அறத்தையும் பண்பையும் வளர்க்க காரணமாக இருந்துள்ளது. தமிழர்களின் வாழ்வியலே பழமொழியாகும். பழமொழிகள் சுருங்கச் சொல்லி விளங்க வைத்தல் என்ற முறையையும் சுருக்கமாக இருந்தாலும் உண்மையான வாழ்வியலை எடுத்துக்கூறி மனிதனை நல்வழிப்படுத்தும்.

**வாழ்வியல் பழமொழிகள் :**

- ஆசைக்கு அளவில்லை
- பேராசைக்கு இல்லை இரக்ககுணம்
- நல்ல அறிவுரை விலைமதிப்பற்றது
- உழைக்க கற்றபின் பொறுக்கக் கற்க

இவ்வாறு பழமொழி மனித வாழ்க்கையைச் செம்மைப்படுத்துவதில் முக்கியப் பங்கு வகிக்கிறது.



11th_General Tamil_RCM_TM.indd 60 8/14/2021 11:09:17 AM

**செயல்பாடு : 2**

**பழமொழி வாழ்க்கை நிகழ்வு :**

"ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையுமா?"

**உணர்த்தும் பொருள்,**

இளமையில் கல்வி கற்காதவன் முதுமையில் கல்வி கற்பது என்பது முடியாத காரியம் ஆகும் அதுபோல இளமையில் முயற்சி செய்யாதவன் முதுமையில் முயற்சி செய்ய முடியாது என்பதை இப்பழமொழி உணர்த்தும் பொருளாகும்.

**வாழ்வியல் நிகழ்வு :**

நானும் என் தோழன் மாறனும் இணைபிரியாதவர்கள் ஆனால் என் தோழன் முதல் வகுப்பிலிருந்தே நன்றாக படிப்பான். ஆனால் நான் சிறுபிள்ளைத்தனமாக விளையாட்டிற்கு முக்கியத்துவம் கொடுத்தேன். அவன் நன்றாகப் படித்து வாழ்வில் உயர்ந்த நிலையை அடைந்தான். ஆனால் என்னால் அவனைப் போல் வாழ்வில் உயர்நிலையை அடைய முடியவில்லை பின்பு முதியோர் கல்விக்கு சென்று படிக்க ஆசைப்பட்டு படித்து வந்தேன். ஆனால் என் முதுமை காரணமாக என்னால் கல்வி கற்க முடியவில்லை. இதிலிருந்து நான் அறிந்து கொண்டது என்னவென்றால் கற்க வேண்டிய கல்வியை முறையாக இளமையிலேயே கற்க வேண்டும் என்பதாகும்.

**அறியும் நீதி :**

சிறுவயதில் கல்வி கற்பது இறுதிவரை நன்மை பயக்கும் என்ற கருத்தைத் தான் இப்பழமொழி எடுத்துரைக்கின்றது.

## மாணவர் செயல்பாடு

மாணவர்களிடம் ஒரு பழமொழியைக் கூறி அந்த பழமொழியை உங்கள் வாழ்க்கையோடு தொடர்புடைய ஒரு கதையை எழுதி வருமாறு கூறுதல்.

## மதிப்பீடு

1. பழமொழியை தொல்காப்பியம் எச்சொல்லால் குறிக்கின்றது ?
2. பழமொழி நம் வாழ்க்கை முறையில் பெறும் முக்கியத்துவம் யாது ?
3. பழமொழி என்றால் என்ன ?
4. 'இளங்கன்று பயமறியாது' வாழ்க்கையோடு தொடர்புப்படுத்தி கதை எழுதுக.



11th_General Tamil_RCM_TM.indd 61 8/14/2021 11:09:17 AM

# 25 கவிதை இயற்றப் பழகுதல்

## கற்றல் விளைவுகள்

- மரபுக்கவிதை, புதுக்கவிதைப் பற்றித் தெரிந்து கொள்ளல்.
- கவிதைப் படைக்கும் திறன் வளர்த்தல்.

## ஆசிரியர் செயல்பாடு

**ஆர்வமூட்டல் :**

கவிதைகளை மரபுக்கவிதை, புதுக்கவிதை என இரண்டாகப் பகுப்பர். இவற்றுள் இலக்கண எல்லைக்குட்பட்டு எழுதப்படும் கவிதை எது? இலக்கண வரம்பின்றி எழுதப்படும் கவிதை எது? என்று வினா கேட்டு ஆர்வமூட்டல்.

## கற்பித்தல் செயல்பாடுகள்

**செயல்பாடு : 1**

இலக்கண மரபை மீறாமல் இயற்றப்படுவது மரபுக்கவிதையாகும். மரபுக் கவிதைகள் பெரும்பாலும் காதல், வீரம், பக்தி போன்றவற்றையே கருவாகக் கொண்டு பாடப்பட்டுள்ளன. இம்மரபை மாற்றி, இலக்கண வரம்பை மீறி, நாட்டுப்பற்று, மொழிப்பற்று, பெண்விடுதலை, சமூகவிடுதலை, இயற்கைவருணனை என மனதில் தோன்றும் யாவற்றையும் கருவாகக் கொண்டு பாடப்படுவனவற்றை வசன கவிதை என்றே முதலில் அழைத்தனர். இவ்வசன கவிதையே பின்னாளில் புதுக்கவிதையானது.

எளிய நடையில், சாமானிய மனிதர்களின் வாழ்க்கையையும் பாடுபொருளாகக் கொண்டு இப்புதுக்கவிதைகள் படைக்கப்படுகின்றன. மேலும் புதுக்கவிதைகள் காலமாற்றத்திற்கு ஏற்ப ஹைக்கூ, குக்கூ, சென்ரியூ, கஸல், நஜ்ம் என பல வடிவங்களில் மலர்ந்துவிட்டன.

**செயல்பாடு : 2**

**மரபுக் கவிதை:**

மரபு என்பது தொன்று தொட்டு வழங்கி வருவதாகும். மரபுக்கவிதை என்றால் அவற்றில் அசை, சீர், தளை, அடி, தொடை போன்ற செய்யுள் உறுப்புகள் அமைய பாடப்படுவதாகும்.

**ஆசிரியப்பா:**

பா இயற்றுவதற்குரிய எளிய வடிவமாக ஆசிரியப்பாவைக் கூறுவர். அகவலோசை பெற்றதால் ஆசிரியப்பாவை 'அகவற்பா' என்றும் கூறுவர். ஆசிரியப்பாக்களால் ஆன பாடல்களே சங்ககாலத் தமிழில் மிகுதியாக உள்ளன.

**ஆசிரியப்பாவின் பொது இலக்கணம்:**

- அகவலோசை கொண்டது.
- அளவடி பெற்றுவரும்.
- இயற்சீர் மிகுந்தும் பிறசீர் கலந்தும் வரும்.
- மூன்றடிச் சிற்றெல்லையாக அமையும். பேரெல்லை பாடுவோரின் கற்பனைக்கேற்ப அமையும்.



11th_General Tamil_RCM_TM.indd 62 8/14/2021 11:09:17 AM

**செயல்பாடு : 3**

**வெண்பா :**

சங்கம் மருவிய காலத்தில் வெண்பா இலக்கியம் பெருகத் தொடங்கின. அறக்கருத்துகள் மனிதனுக்குத் தேவையாக இருந்ததால் வெண்பா யாப்பு செல்வாக்குப் பெற்றது. சொல்லுதலை (செப்பல்) அடிப்படையாகக் கொண்டதால் வெண்பா செப்பலோசை உடையதாயிற்று. மற்ற ஏனைய பாக்களைவிட வரையறுத்த இலக்கணக் கட்டுப்பாடுகளைக் கொண்டது வெண்பா. இதனாலேயே வெண்பாவை வன்பா என்பார்கள்.

**பொது இலக்கணம் :**

- இயற்சீர் வெண்டளை வெண்சீர் வெண்டளை பிறழாது பா அமையவேண்டும்.
- ஈற்றடி முச்சீராகவும் ஏனையவை நாற்சீராகவும் இருக்கும்.
- ஈரசைச்சீரில் மாச்சீரும் விளச்சீரும் வரும். மூவசைச்சீரில் காய்ச்சீர் வரும்.
- ஈற்றுச்சீர் நாள், மலர், காசு, பிறப்பு ஆகிய வாய்பாடுகளுள் ஒன்றைக் கொண்டு முடியும்.

**செயல்பாடு : 4**

**புதுக்கவிதை :**

எளிய நடை, எளிய சொற்கள், எளிதில் அறிந்துகொள்ளும் வண்ணம் பாடப்படுவது புதுக்கவிதை ஆகும்.

*"சுவை புதிது பொருள் புதிது வளம் புதிது*
*சொற்புதிது சோதிமிக்க நவகவிதை"*

என்று பாரதியார் தனது கவிதை மூலமாக புதுக்கவிதையின் இலக்கணத்தை வரையறுக்கிறார்.

தொடக்க காலத்தில் 'வசனக் கவிதை' எனச் சாதாரணமாக அழைக்கப்பட்ட நிலையில் பின்பு புதுக்கவிதை எனப் போற்றிக்கொள்ளப்பட்டது. யாப்பில்லாக் கவிதையாக இயற்றப்பட்டாலும் எதுகை, மோனை, இயைபு என பலவகையான உத்திகள் புதுக்கவிதையில் பயின்று வருவதைக் காணமுடிகிறது.

- கவிதை இயற்றுவதற்கான சில உத்திகள்:
- கவிதை எழுத வேண்டும் என ஏற்படும் மனத்தூண்டல்.
- எழுத எண்ணும் கவிதைக் கரு பற்றிய சிந்தனை.
- மனத்திற்குள்ளாகக் கவிதைக்கான சொற்கோர்வைகள், ஒப்பீடுகள், உவமைகள், படிமங்கள், குறியீடுகள் முதலானவற்றைப் பற்றிய சிந்தனை.
- அடுக்குதல், செம்மைப் படுத்துதல், செழுமையூட்டுதல், யாப்பொழுங்கு செப்பனிடல் என்னும் வழிமுறைகளில் எழுதிய கவிதைகளைச் சீர் செய்தல்.
- கவிதைக்குரிய வடிவத்தில் அமைத்தல்.

## மாணவர் செயல்பாடு

- பாடநூலில் இடம்பெற்றுள்ள சங்ககாலக் கவிதைகளையும் புதுக்கவிதைகளையும் வாசித்தல்.
- மரபுக்கவிதைக்கும் புதுக்கவிதைக்கும் உள்ள வேறுபாடுகளைத் தெரிந்து கொள்ளல்.
- ஏதேனும் ஒரு தலைப்பில் புதுக்கவிதை எழுதிப் பழகுதல்.

## மதிப்பீடு

1. மரபுக்கவிதை, புதுக்கவிதை வேறுபடுத்துக.
2. மழை' என்னும் தலைப்பில் புதுக்கவிதை எழுதுக.



11th_General Tamil_RCM_TM.indd 63 8/14/2021 11:09:17 AM

# 26 கலைச்சொல்லாக்கம்

## கற்றல் விளைவுகள்

- கலைச்சொல்லாக்கம் பற்றி அறிதல்.
- நவீன காலத்தின் தேவை கலைச்சொற்கள் என்பதை அறிந்து உணர்தல்.
- துறை சார்ந்த கலைச்சொற்களை அறிதல்.

## ஆசிரியர் செயல்பாடு

**ஆர்வமூட்டல் :**

மாணவர்களே! வணக்கம். உலகத்தில் நடக்கும் அனைத்து செய்திகளையும் வீட்டிலிருந்தே நாம் தெரிந்துகொள்ள உதவும் சாதனங்கள் (டிவி, கம்ப்யூட்டர், செல்போன், ரேடியோ) (தொலைக்காட்சி, கணினி, கைப்பேசி, வானொலி) மாணவர்கள் பல விதமான பதில்களைக் கூறுதல். அதற்கான தமிழ்ச்சொற்களை ஆசிரியர் கூறி ஆர்வமூட்டல்.

## கற்பித்தல் செயல்பாடுகள்

**செயல்பாடு : 1**

**கலைச்சொற்கள் :**

மொழிபெயர்ப்பின் உயிர்த்துடிப்பு கலைச் சொற்கள் ஆகும். ஒரு மொழியின் காலத்திற்கேற்ப துறை சார்ந்த புதிய கண்டுபிடிப்புகளுக்காக உருவாக்கிப் பயன்படுத்தப்படும் சொற்களைக் கலைச்சொற்கள் என்கிறோம்.

**கலைச்சொல்லாக்கம் :**

- ஒரு மொழியில் இல்லாத சொல்லுக்கு வேறு மொழியினின்று நேரடியாகச் சொற்களைப் பெற்றோ ஒலிப் பெயர்த்தோ அல்லது மொழிபெயர்த்தோ புதுச் சொற்களை ஆக்கிக் கொள்வதைக் கலைச்சொல்லாக்கம் என்பர்.
- புதிதாக உருவாக்கப்படும் கலைச்சொல் தமிழ்ச் சொல்லாக இருத்தல் வேண்டும். பொருள் பொருத்தமுடையதாகவும், செயலைக் குறிப்பதாகவும், எளிமையானதாகவும், வடிவில் சிறியதாகவும், தமிழ் இலக்கண மரபுக்கு உட்பட்டதாகவும் இருத்தல் வேண்டும்.
- மொழியின் வேர்ச்சொல்லை அடிப்படையாகக் கொண்டு பல சொற்களை மேலும் உருவாக்கும் ஆக்கத் திறன் கொண்டதாக இருக்க வேண்டும்.

**சான்று :**

- Library – நூலகம்
- Librarian – நூலகர்
- Library Science – நூலக அறிவியல்



11th_General Tamil_RCM_TM.indd 64 8/14/2021 11:09:17 AM

### செயல்பாடு : 2

கலைச்சொற்கள் உருவாக்கம்

கலைச்சொற்கள் ஐந்து வகையான நிலைகளில் தோன்றுகின்றன.

- ஒலிபெயர்ப்பு
- தமிழாக்கம்
- கலப்புச் சொல்
- கடன் மொழிபெயர்ப்பு
- புதுச்சொல் படைத்தல்

#### ஒலிபெயர்ப்பு :

**சான்று :**

- pasparas – பாஸ்பரஸ்
- America – அமெரிக்கா

#### தமிழாக்கம் :

**சான்று :**

- Acid – அமிலம்
- Shirt – சட்டை

#### கலப்புச் சொல் :

**சான்று :**

- Ioinization – அயனி ஆக்கம் அல்லது எந்திரக் கலவை.

#### கடன் மொழிபெயர்ப்பு :

**சான்று :**

- Television – தொலைக்காட்சி

#### புதுச் சொல் படைத்தல்

**சான்று :**

- Bicycle – ஈருருளி

### செயல்பாடு : 3

தமிழ்நாடு பாடநூல் நிறுவனம் 20க்கும் மேற்பட்ட துறைகளுக்குக் கலைச்சொற்கள் உருவாக்கி உள்ளது. தகவல் தொழில்நுட்ப கலைச்சொற்கள், மருத்துவத்துறை கலைச்சொற்கள் எனச் சிலவற்றை எடுத்துக்காட்டு மூலம் விளக்குதல்.

#### தகவல் தொழில்நுட்ப கலைச்சொற்கள் :

- Online – இயங்கலை
- Broad Band – ஆலலை
- CCTV – மறைகாணி
- Scanner – வருடி
- Digital – எண்மின்
- E–Mail – மின்னஞ்சல்

**மருத்துவத்துறை கலைச்சொற்கள் :**

- Doctor – மருத்துவர்
- Tablet – மாத்திரை
- Gene – மரபணு
- Insulin – கணையச் சுரப்பு நீர்
- X–Ray – ஊடுகதிர்
- Spinal Cord – முதுகுத்தண்டு

## மாணவர் செயல்பாடு

நாம் அன்றாடம் பயன்படுத்தும் ஆங்கிலச் சொற்களுக்கு இணையான தமிழ்க்கலைச் சொற்களைக் கரும்பலகையில் எழுதச் சொல்லுதல்.

**சான்று :**

- Touch screen – தொடுதிரை.
- Smart phone – திறன் பேசி.
- Accountant – பற்று வரவு கணக்கு.

## மதிப்பீடு

1. கலைச்சொற்கள் என்றால் என்ன ?
2. கலைச்சொல்லாக்கம் பொருள் தருக.
3. மருத்துவத்துறை சார்ந்த கலைச்சொற்கள் நான்கினை எழுதுக ?



11th_General Tamil_RCM_TM.indd 66 8/14/2021 11:09:17 AM

# 27 திருக்குறள்

## கற்றல் விளைவுகள்

- திருக்குறள் பெயர்க்காரணத்தை அறியச் செய்தல்.
- திருக்குறள் அமைப்பினை புரிந்து கொள்ளச் செய்தல்.
- திருக்குறளின் சிறப்புகளை உணரச் செய்தல்.
- திருக்குறள் விளக்கங்களை உணர்ந்து அதனை வாழ்க்கையில் பயன்படுத்துதல்.

**ஆர்வமூட்டல் :**

நீங்கள் சுற்றுலா சென்றிருக்கிறீர்களா? எங்கெல்லாம் சென்று உள்ளீர்கள்? அங்கு என்னென்ன நயங்களைப் பார்த்து ரசித்து உள்ளீர்கள்? தமிழகத்தின் தென்கோடியில் உள்ள கன்னியாகுமரி சென்றுள்ளீர்களா? அங்குள்ள சிலை யாருடையது? அவற்றின் உயரம் எவ்வளவு? எதற்காக அந்த உயரத்தை தேர்வு செய்து கட்டியுள்ளார்கள்? இவ்வாறான உரையாடல் வாயிலாக மாணவர்களை ஆர்வமுட்டி 'திருக்குறள்' என்ற பாடப்பகுதியில் உள்நுழைய இயலும்.

## கற்பித்தல் செயல்பாடுகள்

**செயல்பாடு : 1**

**திருக்குறள் பெயர்க்காரணம் :**

திரு+குறள் = திருக்குறள். குறள் = குறுகிய வடிவினை உடையது. முதல் அடியில் நான்கு சீர்களும் இரண்டாம் அடியில் மூன்று சீர்களும் பெற்று குறுகிய வடிவினைக் கொண்டிருப்பதால் குறள் எனப்படுகின்றது. குறள் என்னும் யாப்பமைதிப் பெயருக்கு முன் 'திரு' என்னும் அடைமொழி பெற்று திருக்குறள் என வழங்கப்படுகின்றது.

பதினெண் கீழ்க்கணக்கு நூல்களுள் குறள் வெண்பாவால் ஆன ஒரே நூல். திருக்குறளை முதன் முதலாகப் பதிப்பித்தவர் மலையத்துவசன் மகன் ஞானப்பிரகாசம் – 1812. பரிமேலழகர் உரையுடன் முதன்முதலாகத் திருக்குறளைப் பதிப்பித்தவர் இராமானுஜ கவிராயர் – 1840.

**செயல்பாடு : 2**

**திருக்குறள் அமைப்பு:**

| திருக்குறள் (முப்பால்) | | | |
|---|---|---|---|
| முப்பால் | அறம் | பொருள் | இன்பம் |
| அதிகாரங்கள் | 38 | 70 | 25 |
| குறள்கள் | 380 | 700 | 250 |
| இயல்கள் | 04 | 03 | 02 |
| இயல் பகுப்பு | பாயிரவியல் | அரசியல் | களவியல் |
| | இல்லறவியல் | அங்கவியல் | கற்பியல் |
| | துறவறவியல் | ஒழிபியல் | |
| | ஊழியல் | | |



11th_General Tamil_RCM_TM.indd 67 8/14/2021 11:09:18 AM

### செயல்பாடு : 3

### திருக்குறளின் சிறப்புகள் :

- திருக்குறளின் சிறப்பை எடுத்துக்கூறும் நூல் திருவள்ளுவமாலை
- திருக்குறள் உரைகளுள் பரிமேலழகர் உரை சிறப்பானது.
- திருவள்ளுவர் வாழ்ந்த காலம் கி.மு.31.
- திருக்குறளின் உட்பிரிவு இயல்.

### திருவள்ளுவரின் வேறு பெயர்கள் :

- தேவர்
- நாயனார்
- முதற்பாவலர்
- தெய்வப்புலவர்
- நான்முகன்
- செந்நாப்போதார்
- பெருநாவலர்
- பொய்யில் புலவர்

### திருக்குறளின் வேறு பெயர்கள் :

- உத்திரவேதம்
- தமிழ்மறை
- பொதுமறை
- பொய்யாமொழி
- வாயுறை வாழ்த்து
- திருவள்ளுவம்
- திருவள்ளுவப் பயன்
- தெய்வ நூல்.

### செயல்பாடு : 4

### திருக்குறள் விளக்கங்கள் :

- அதிகாரம் – நிலையாமை
- பால் – அறத்துப்பால்
- இயல் – துறவறவியல்

### அதிகார விளக்கம் :

எதுவுமே இவ்வுலகில் நிலையில்லாதது
**குறள் எண் : 06**
**குறள் :**

*"நெருநல் உளன்ஒருவன் இன்றில்லை என்னும்*
*பெருமை உடைத்துஇவ் வுலகு."*



11th_General Tamil_RCM_TM.indd 68 8/14/2021 11:09:18 AM

**குறள் விளக்கம் :**

நேற்று உயிருடன் இருந்த ஒருவன் இன்றில்லை என்று கூறும்படியான பெருமைக்குரியது இவ்வுலகம். இதுபோன்று பாடப்பகுதியில் இடம் பெற்றுள்ள ஒவ்வொரு குறளுக்கும் விளக்கவுரை அளித்து அதனைப் பின்பற்றி வாழ்க்கையில் நடக்கச் செய்தல்.

## மாணவர் செயல்பாடு

மாணவர்களிடம் எந்தெந்த இடங்களிளெல்லாம் திருக்குறள் இடம்பெற்று இருக்கின்றனவென்று கலந்துரையாடச் செய்து பட்டியலிடச் செய்தல். மேலும் திருக்குறள் பகுதியினைத் தங்களுக்குள் ஒப்புவிக்கச் செய்தல்.

## மதிப்பீடு

1. திருக்குறளின் அறத்துப்பாலில் உள்ள அதிகாரங்கள் எத்தனை ?
2. பொருட்பாலின் இயல்கள் என்னென்ன ?
3. திருவள்ளுவர் வாழ்ந்த காலம் என்ன?

# 28 சங்க இலக்கியம்

## கற்றல் விளைவுகள்

- சங்க இலக்கியம் பற்றி அறிதல்.
- சங்க இலக்கிய அமைப்பினைப் புரிந்து கொள்ளுதல்.
- எட்டுத்தொகை நூல் அமைப்பினைத் தெரிந்து கொள்ளுதல்.
- பத்துப்பாட்டு நூலின் உட்கூறுகளை உணரச் செய்தல்.

## ஆசிரியர் செயல்பாடு

**ஆர்வமூட்டல் :**

*"செம்புலப் பெயல் நீர் போல*
*அன்புடை நெஞ்சம் தாம் கலந்தனவே"*

இந்த வரிகள் எந்த நூலில் இடம் பெற்றுள்ளது? வேறு ஏதேனும் இடங்களில் கேட்டதுண்டா?

இப்பாடல் இடம் பெற்றுள்ள இலக்கியம் எவ்வகையான இலக்கியம் என மாணவர்களின் சிந்தனையைத் தூண்டி ஆர்வத்துடன் பாடப்பகுதிக்குள் செல்லுதல்.

## கற்பித்தல் செயல்பாடுகள்

**செயல்பாடு : 1**

- சங்ககாலத்தில் பாடப்பட்டதால் சங்க இலக்கியம் எனப் பெயர் பெற்றது என்பர் சிலர்.
- வச்சிரணந்தியின் சங்கத்தில் தொகுக்கப்பட்டதால் சங்க இலக்கியம் எனப் பெயர் பெற்றது என்பர் சிலர்.
- திணை இலக்கியம் எனப்படுவது சங்க இலக்கியம்.
- சங்க இலக்கியத்திற்குப் பதினெண்மேற்கணக்கு என்ற பெயரும் உண்டு.
- சங்க இலக்கியத்தைச் சான்றோர் செய்யுட்கள் என்பர். அவ்வாறு சொன்னவர் தொல்காப்பிய உரையாசிரியர் பேராசிரியர் ஆவார்.
- சங்க நூல்கள் / இலக்கியங்கள் என்று முதலில் கூறியவர் களவியல் உரையாசிரியர் நக்கீரர்.
- அறமும் இன்பமும் சேர்ந்த நூல் சங்க இலக்கியம்.
- தமிழரின் அடையாளமாக விளங்குவது சங்க இலக்கியம்.
- எட்டுத்தொகையும் பத்துப்பாட்டும் சங்க இலக்கியங்களாகும்.



11th_General Tamil_RCM_TM.indd 70 8/14/2021 11:09:18 AM

### செயல்பாடு : 2

- ✍ எட்டுத்தொகையும் பத்துப்பாட்டும் பதினெண்மேற்கணக்கு நூல்கள் ஆகும்.
- ✍ கணக்கு என்பதற்கு நூல் என்று பொருள்.
- ✍ கணக்கு என்பதற்கு அறம் என்ற பொருளும் உண்டு என்பார் இரத்தினசபாபதி
- ✍ மேற்கணக்கு என்பது வாழ்வியலை விரித்துக் கூறுவதன் மூலம் நீதிகளைக் கூறுவது.
- ✍ தொகை என்பது பல புலவர்கள் பாடிய பாடல்களைக் கொண்ட நூல்.
- ✍ பாட்டு என்பது தனி ஒருவர் பாடிய நூல்.
- ✍ அகப்பாடல்கள் அனைத்தும் பாத்திரக் கூற்றுகள்.
- ✍ புறப்பாடல்கள் அனைத்தும் புலவர் கூற்றுகள்.
- ✍ கீழ்க்கணக்கு என்பது வாழ்க்கையின் சாராம்சத்தைச் சுருக்கமாய்ச் சுட்டி நீதிகளைக் கூறுவது.

### செயல்பாடு : 3

#### எட்டுத்தொகை நூல் அமைப்பு:

சங்க கால மக்களின் வாழ்வியலை ஓவியம்போல எடுத்துரைக்க வல்லன எட்டுத்தொகை நூல்கள். சங்ககால மக்கள் வீரத்தையும் ஈரத்தையும் இரு கண்களாகப் போற்றினர். காதல், பெருமிதம், நீதி முதலான உணர்ச்சிகளை எட்டுத்தொகை நூல்கள் சித்தரிக்கின்றன.

எட்டு நூல்களின் தொகுப்பே எட்டுத்தொகை எனப்படுகின்றது. இவற்றிற்கு எண் பெருந்தொகை எனவும் பெயருண்டு.

*"நற்றிணை நல்ல குறுந்தொகை ஐங்குறுநூறு*
*ஒத்த பதிற்றுப்பத்து ஓங்குபரிபாடல் – கற்றறிந்தார்*
*ஏத்தும் கலியோடு அகம்புறம் என்று*
*இத்திறத்த எட்டுத் தொகை "*

எனும் பழம்பாடல் உணர்த்துகின்றது.

| எட்டுத்தொகை | | |
|---|---|---|
| அகம் (05) | புறம் (02) | அகம்/ புறம் – (01) |
| நற்றிணை | பதிற்றுப்பத்து | பரிபாடல் |
| குறுந்தொகை | புறநானூறு | |
| ஐங்குறுநூறு | | |
| கலித்தொகை | | |
| அகநானூறு | | |

- ✍ எட்டுத்தொகையுள் பாடலால் புகழ்பெற்ற நூல்கள் கலித்தொகை (கலிப்பா), பரிபாடல் (பரிபாட்டு).
- ✍ எட்டுத்தொகையில் காலத்தால் முந்தியது குறுந்தொகை.



11th_General Tamil_RCM_TM.indd 71 8/14/2021 11:09:18 AM

## செயல்பாடு : 4

### பத்துப்பாட்டு உட்கூறுகள் :

பத்துப்பாட்டில் ஆற்றுப்படை நூல்கள் ஐந்து, பத்துப்பாட்டில் அகமா? புறமா? என்ற கருத்து வேறுபாட்டைத் தோற்றுவித்த நூல் நெடுநல்வாடை .

பத்துப்பாட்டில் சிறிய நூல் முல்லைப்பாட்டு – 103 அடிகள்

பத்துப்பாட்டில் பெரிய நூல் மதுரைக்காஞ்சி – 782 அடிகள்

| பத்துப்பாட்டு | | |
|---|---|---|
| புறம் 06 | அகம் 03 | அகம்/ புறம் – 01 |
| திருமுருகாற்றுப்படை | முல்லைப்பாட்டு | நெடுநல்வாடை |
| பொருநராற்றுப்படை | குறிஞ்சிப்பாட்டு | |
| சிறுபாணாற்றுப்படை | பட்டினப்பாலை | |
| பெரும்பாணாற்றுப்படை | | |
| மதுரைக்காஞ்சி | | |
| மலைபடுகடாம் | | |

## மாணவர் செயல்பாடு

எட்டுத்தொகை, பத்துப்பாட்டிலுள்ள நூல்களை அக நூல்கள், புற நூல்கள் மற்றும் அகப்புற நூல்கள் எவையெவை என்பதைக் கரும்பலகையில் மாணவரை எழுதச் செய்தல்.

## மதிப்பீடு

1. திணை இலக்கியம் வேறு எவ்வாறு அழைக்கலாம்?
2. 'கணக்கு' என்பதன் பொருள் யாது?
3. எட்டுத்தொகையில் புறம் சார்ந்த நூல்கள் எவை?
4. பத்துப்பாட்டில் சிறிய நூல் எது?



11th_General Tamil_RCM_TM.indd 72 8/14/2021 11:09:18 AM

# 29 சிற்றிலக்கியங்கள்

## கற்றல் விளைவுகள்

- பேரிலக்கியங்களுக்கான அடிப்படையை அறிந்து கொள்ளுதல்.
- சிற்றிலக்கியங்கள் பற்றியும், அவற்றின் வகைகளையும் தெரிந்துகொள்ளுதல்.

## ஆசிரியர் செயல்பாடு

**ஆர்வமூட்டல் :**

மாணவர்களே! நீங்கள் அறிந்த சிற்றிலக்கிய வகை பற்றி கூறுங்கள்? என வினவி பதிலைப் பெற்று அவற்றை அறிமுகப்படுத்தி எடுத்துக் கூறுதல்.

## கற்பித்தல் செயல்பாடுகள்

**செயல்பாடு : 1**

அறம், பொருள், இன்பம், வீடுபேறு என்ற நான்கு உறுதிப் பொருட்கள் அனைத்தும் சேர்ந்து உருவாக்கப்படுவது பேரிலக்கியம் அல்லது பெருங்காப்பியம் என்று அழைக்கப்படும். இவற்றுள் ஒன்றோ இரண்டோ குறைந்து வந்தால் அவை சிற்றிலக்கியம் என்று அழைக்கப்படும்.

'பிரபந்தம்' என்ற வடமொழிச் சொல்லுக்கு 'நன்கு கட்டப்பட்டது' என்று பொருள். பிரபந்தம் என்பது தமிழில் 'சிற்றிலக்கியம்' என்று வழங்கப்படுகின்றது. சிற்றிலக்கியங்கள் பற்றிய செய்திகளைப் பாட்டியல் நூல்கள் நமக்குத் தெளிவாக உணர்த்துகின்றன. தமிழில் 96 வகையான சிற்றிலக்கியங்கள் உள்ளன.

அந்தாதி, தூது, உலா, கோவை, கலம்பகம், பரணி, பிள்ளைத்தமிழ், பள்ளு, குறவஞ்சி, அம்மானை போன்ற சிற்றிலக்கிய வகைகள் தமிழில் சிறப்புற்று விளங்கின.

**செயல்பாடு : 2**

**பிள்ளைத்தமிழ் :**

"குழவி மருங்கினும் கிழவதாகும்" என்று தொல்காப்பியர் கூறுவார். பாட்டுடைத் தலைவனைக் குழந்தையாகப் பாவித்துப் பாடும் முறைக்குப் பிள்ளைத்தமிழ் என்று பெயர். இது ஆண்பால் பிள்ளைத்தமிழ், பெண்பால் பிள்ளைத்தமிழ் என இரு வகைப்படும்.

பிள்ளைத்தமிழுக்குரிய பருவங்கள் பத்து. அவற்றுள் காப்பு, செங்கீரை, தால், சப்பாணி, முத்தம், வருகை, அம்புலி ஆகிய ஏழும் இருபால் பிள்ளைத்தமிழுக்கும் பொதுவானது. சிற்றில், சிறுபறை, சிறுதேர் ஆகிய மூன்றும் ஆண்பால் பிள்ளத்தமிழுக்குரியனவாகும். கழங்கு, நீராடல், ஊசல் ஆகிய மூன்றும் பெண்பால் பிள்ளைத்தமிழுக்குரியனவாகும்.

**குறிப்பிடத்தகுந்த பிள்ளைத்தமிழ் நூல்கள்:**

- முத்துக்குமாரசாமி பிள்ளைத்தமிழ்
- சேக்கிழார் பிள்ளைத்தமிழ்
- மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழ்



11th_General Tamil_RCM_TM.indd 73 8/14/2021 11:09:18 AM

### செயல்பாடு : 3

**பள்ளு:**

பள்ளர்கள் என்று கூறப்படும் உழவர்களின் வாழ்க்கையை அடிப்படையாகக் கொண்டு எழுந்த நூல் பள்ளு என்ற இலக்கியம் ஆகும். இதனை உழவர் பாட்டு, உழத்தியர் பாட்டு, ஏர் மங்கலம், பள்ளுப்பாட்டு என்ற பெயர்களில் அழைப்பர். இது தொல்காப்பியர் கூறும் 'புலன்' என்னும் வகையைச் சார்ந்தது. பள்ளு நூல்கள் கலிப்பா, விருத்தம், சிந்து போன்ற பா வகைகளால் இயற்றப்படும். "நெல் வகையை எண்ணினாலும் பள்ளு வகையை எண்ண முடியாது" என்பர். குறிப்பிடத்தகுந்த நூலாக முக்கூடற் பள்ளு விளங்குகிறது.

### செயல்பாடு : 4

**குறவஞ்சி:**

நாடக இலக்கியத்திற்குத் தகுந்த சான்றாக விளங்குவது குறவஞ்சி இலக்கியமே ஆகும். பாட்டுடைத் தலைவனை அவனது உலாவின்போது கண்டு காதல்கொண்டு துயரால் தவிக்கும் தலைவிக்குக் குறத்தி குறி கூறுவதாக அமைவது குறவஞ்சி ஆகும்.

பாட்டுடைத் தலைவன் உலா வருதல், உலாவைக் காண பெண்கள் வருதல், தலைவன் மீது காதல் கொள்ளுதல், தலைவி பற்றிய செய்திகள், தலைவி தோழியைத் தூது அனுப்புதல், குறத்தி வருதல், குறி கூறுதல், குறவன் வருதல், வாழ்த்து மங்கலம் என்ற பகுதிகளைக் கொண்டதாகக் குறவஞ்சி இலக்கியம் அமைந்திருக்கும். திரிகூடராசப்பக் கவிராயரால் இயற்றப்பட்ட குற்றாலக்குறவஞ்சியே முதல் குறவஞ்சி இலக்கியமாகும்.

## மாணவர் செயல்பாடு

கரும்பலகையில் சில சிற்றிலக்கிய நூல்களை எழுதி அவற்றினை இயற்றிய ஆசிரியர் பெயரைக் கூறச் செய்தல்.

## மதிப்பீடு

1. பிரபந்தம் என்ற சொல்லின் பொருள் யாது?
2. சிற்றிலக்கியங்கள் எத்தனை வகைப்படும்? ஏதேனும் ஐந்து பெயர்களை எழுதுக.
3. பிள்ளைத்தமிழ் பருவங்கள் கூறி விளக்குக.



11th_General Tamil_RCM_TM.indd 74 8/14/2021 11:09:18 AM

# 30 பாரதியார்

## கற்றல் விளைவுகள்

- பாரதியாரின் வாழ்க்கை வரலாற்றை அறிந்து கொள்ளுதல்.
- பாரதியின் படைப்புகளில் உள்ள சிறப்புகளைத் தெரிந்து கொள்ளுதல்.
- பாரதியின் தேசப்பற்று, மொழிப்பற்று, சமூகப் பற்று ஆகியவற்றைப் புரிந்துகொள்ளல்.

## ஆசிரியர் செயல்பாடு

**ஆர்வமூட்டல் :**

மாணவர்களே! 'மகாகவி' என்று அழைக்கப்படுபவர் யார்? என வினா எழுப்பி மாணவர்கள் விடையளித்தபின் பாரதியின் தோற்றம், சிறப்பு, படைப்பு ஆகியவற்றை எடுத்துரைத்தல்.

## கற்பித்தல் செயல்பாடுகள்

**செயல்பாடு : 1**

எட்டயபுரம் என்ற ஊரில் சின்னசாமி – இலட்சுமி அம்மையாருக்கு மகனாகப் பிறந்தவர் பாரதியார். இவருக்குப் பெற்றோர் இட்ட பெயர் சுப்பிரமணியன். 11 ஆம் வயதில் கவிபுனையும் ஆற்றல் பெற்றதால் "பாரதி "என்ற பட்டம் பெற்று அதுவே நிலைத்தது. தந்தையிடம் தமிழ், ஆங்கிலம், கணிதம் பயின்றார்.

பாரதியின் ஞானகுரு நிவேதிதா தேவி, அரசியல் குரு திலகர். ஆங்கிலப் புலவர் ஷெல்லியிடம் அளவிலா ஈடுபாடு கொண்டு தம்மை ஷெல்லிதாசன் என்று அழைத்துக்கொண்டார். இவர் இருபதாம் நூற்றாண்டுக் கவிதையின் ஊற்றுக்கண்.

**செயல்பாடு : 2**

தமிழிலே தோன்றிய முதல் சுயசரிதம் பாரதியாரின் சுயசரிதம். முதல் உரைநடைக் காவியம் அவருடைய ஞானரதம். பகவத் கீதையைத் தமிழில் மொழி பெயர்த்தார். பதஞ்சலியார் சூத்திரத்திற்கு உரை வகுத்தார். இவர் ஆங்கிலம், இந்தி, வடமொழி, பிரெஞ்சு, வங்காளி, ஜெர்மன், இலத்தீன் ஆகிய மொழிகளில் புலமை பெற்றிருந்தார்.

**பாரதியாரின் நூல்கள்**

- கண்ணன் பாட்டு
- குயில் பாட்டு
- பாஞ்சாலி சபதம்
- புதிய ஆத்திசூடி
- பாரதி 66
- பாப்பா பாட்டு
- நவதந்திரக் கதைகள்

பாரதியார் பாடிய விநாயகர் நான்மணிமாலை, தோத்திரப் பாடல்கள், வேதாந்தப் பாடல்கள் இவற்றைப் பக்திப் பாடல்களில் அடக்கலாம். தேசபக்திப் பாடல்களாக அவர் பாடியவை பலவாகும். 'பாரத நாடு' என்று தலைப்பில் 19 பாடல்களையும் தமிழ்நாடு, மொழி என்ற தலைப்பில் ஆறு பாடல்களையும் சுதந்திரம் பற்றி ஆறு பாடல்களையும் இயற்றியுள்ளார்.

**செயல்பாடு : 3**

எளிய சிறிய கவிதைகளில் மக்கட்கும் புரியும் வண்ணம் தம் கருத்துகளை எடுத்து வைத்தவர் பாரதி. அவரே தம் கவிதைகள் பற்றிச் சுவை புதிது; பொருள் புதிது; வளம் புதிது; நவகவிதை எந்நாளும் அழியாத மா கவிதை என்று பொருளிலும் சுவையிலும் புரட்சி செய்யும் தம் கவிதைப் படைப்புகளைப் பாராட்டுகிறார்.

*" யாமறிந்த மொழிகளிலே தமிழ்மொழி போல்*
*இனிதாவது எங்கும் காணோம் "*

என்று மொழியின் சிறப்பை எடுத்துரைத்தார்.

பெண்ணடிமை நீங்க பெண் கல்வி அவசியம் என்று உணர்ந்த பாரதி புதுமைப்பெண்கள் உருவாகவேண்டும் என்று தன் கவிதையில் புதுமைகளைப் புகுத்தினார்.

*"நிமிர்ந்த நன்னடை நேர்கொண்ட பார்வையும்*
*நிலத்தில் யார்க்கும் அஞ்சாத நெறிகளும்*
*திமிர்ந்த ஞானச் செருக்கும் இருப்பதால்*
*செம்மை மாதர் திறம்புவ தில்லையாம்".*

**செயல்பாடு : 4**

*"செப்புமொழி பதினெட்டுடையாள்– எனில்*
*சிந்தனை ஒன்றுடையாள் "*
*ஒன்று பட்டால் உண்டு வாழ்வு– நம்மில்*
*ஒற்றுமை நீங்கிடில் அனைவர்க்கும் தாழ்வு"*

என்றெல்லாம் "வேற்றுமையில் ஒற்றுமை" என்ற தாரக மந்திரத்தை நம்நாட்டின் பெருமையாக கவிதைகளில் பறைசாற்றினார்.

*"தனி ஒருவனுக்கு உணவில்லை எனில்*
*சகத்தினை அழித்திடுவோம்"*

என்று வறுமைக்கு எதிராகவும் குரல் கொடுத்தார் மகாகவி. பல புதிய இலக்கிய வடிவங்களை அறிமுகம் செய்ததோடு புதுமை சிந்தனைகளை மக்களிடத்தில் பரப்பி கவிதையில் தன்னிகரற்ற நிலையை மகாகவி பாரதியார் பெற்றுள்ளார். இவரது பெயரால் பல்கலைக்கழகம் அமைத்து அரசு சிறப்பித்துள்ளது.

## மாணவர் செயல்பாடு

- ✍ கரும்பலகையில் பல்வேறு புனைப்பெயர்களை எழுதி அதில் பாரதியின் புனைப்பெயர்களை அடையாளம் காணச் செய்தல்.
- ✍ மாணவர்களை இரு குழுக்களாக்கி பாரதியின் படைப்புகளைக் கூறி விடை அறியச் செய்தல்.

## மதிப்பீடு

1. பாரதியார் அறிந்த மொழிகள் சிலவற்றைக் கூறுக.
2. பாரதியாரின் படைப்புகளை எழுதுக.
3. பாரதியின் புனைப் பெயர்களை குறிப்பிடுக.



11th_General Tamil_RCM_TM.indd 76 8/14/2021 11:09:18 AM